

# துமி - 4

## 2014

## தி/செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்

### திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துமி – 04

திி/செல்வநாயகபுரம் இந்து மகா

வித்தியாலயம்

திருகோணமலை

2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுட வாசகம் MOTTO

ஒழுக்கம், கல்வி, உயர்வு

**Discipline, Education, Upliftment**

## தூரநோக்கு VISION

தரமான கல்வி மூலம் தரமான சமூகம்

**Standard Society through Standard Education**

## பணிக்கூற்று MISSION

நவீன உலகிற்கு ஈடு கொடுக்கத்தக்கதாக

நற்பிரஜைகளை புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு

இணங்க கற்றல் கற்பித்தல் செயன்முறை

மூலம் அடைதல்

**Creating good citizens through learning and teaching process according to the new educational reforms to cope with the modern world**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

அரசினர் இந்து மகா வித்தியாலயம் வாழ்க
அன்னையர் தந்தையர் அனைவரும் வாழ்க
சீர் நிமிர்ந்தெங்கனும் சிறப்புடன் வாழ்கவே
சீரிய கல்வி செல்வமே சூழ்கவே
வாழ்க... வாழ்க...வாழ்க...

வள்ளுவன் பாரதி இளங்கோ கம்பனில்லம்
வளர்ந்தோங்கும் அறிவுடன் வாழ்த்திடும் உள்ளம்
கல்வியும் கடமையும் கற்றவர் செல்வம்
கருணையின் உருவே கண்கண்ட தெய்வம்
வாழ்க... வாழ்க...வாழ்க...

சாந்தி சமாதானம் சமத்துவம் வேண்டும்
சத்தியமே என்றும் நித்தியம் வேண்டும்
மாந்தருள் ஆசிரியர் மதிப்புள்ள குருவாம்
மாநிலத்தில் அவரே மாண்புள்ள திருவாம்
வாழ்க... வாழ்க...வாழ்க...

நல்லவர் உள்ளம் நல்கிய நிலையம்
செல்வநாயகபுரத்தினில் உதயம்
வல்லவர் கொடையினில் மகிழ்ந்தனர் இதயம்
கல்வியினால் இங்கே பிறந்திடும் சரிதம்
வாழ்க... வாழ்க...வாழ்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை சுயவிபரம்

- பெயர் :- தி/செல்வநாயகபுரம் இந்து மகாவித்தியாலயம்
- முகவரி :- செல்வநாயகபுரம், உப்புவெளி, திருகோணமலை.
- தாபனம் :- 1970.03.25
- தாபகர் :- தி.ஏ.எஸ்.எம்.ஜெகநாதன், ந.திருநாவுக்கரசு, சி.கதிர்காமத்தம்பி, தோ.மனுவல், சீ.ஜீவராசா
- பாடசாலை எண் :- 29168
- பாடசாலை குறியீட்டு எண் :- 1701026
- பாடசாலை தொகை மதிப்பீட்டு எண் :- 16077
- முதல் அதிபர் :- திரு.ச.சுப்பிரமணியம்
- மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது :- 1995
- பாடசாலை வகை :- 1C
- பாடசாலை தினம் :- பங்குனி 25
- பாடசாலையின் நிறம் :- நீலம்
- தொலைபேசி இலக்கம் :- 026 22 20021
- மின்னஞ்சல் :- shelvato@gmail.com
- இணையத்தள முகவரி :- www.Selvaschool.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



திருகோணமலைக் கல்வி வலயத்தினுள் முன்னோக்கி வீறுநடை போடுகின்ற பாடசாலை வரிசையில் தி/செல்வநாயகபுரம் இந்து மகாவித்தியாலயமும் இணைந்து கொண்டு செயற்பட்டு வருவது பாராட்டுக்குரியது இப்பாடசாலையிலிருந்து இவ்வருடம் (2014) கா.பொ.த(உ/த) பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் கலை, வர்த்தகப்பிரிவு மாணவர்களுக்கு இறைவனது ஆசி கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

வருடாந்த உயர்தர மாணவர் ஒன்றிய ஒன்றுகூடல் நிகழ்வின் போது பங்கு பெறும் அனைத்து மாணவர்களும் பதிவுகள் வரலாற்று ஆவணமொன்றில் இடம் பிடிப்பது போற்றத்தக்க விடயமாகும். அந்த வகையில் பாடசாலையின் வரலாற்று ஆவணமான "துமி-4" வெளிவருவதையிட்டு மனதார வாழ்த்துகின்றேன்.


மாணவர்கள் ஆசிரியர்களுக்காக சில வார்த்தைகள் கல்வியின் மூலம் சமூகம் ஏற்றுக் கொள்ளத்தக்க நல்ல பிரஜைகளை உருவாக்குதலாகும். இச்சந்தர்ப்பத்தில் ஆன்மீக உணர்வையும் நெறி முறைகளையும் ஒழுக்க விதிகளையும் ஒருங்கே அனுசரித்து சிறந்த சமூகமாக மிளிர எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ந.விஜேந்திரன்
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்




திரு.க.பேரானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் வாழ்த்துச்செய்தி

எமது பாடசாலையில் 2011ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட துமி-1 சஞ்சிகையானது "துமி"எனும் பெயருக்கேற்ப துளியாய் பெருகி நான்காவது ஆண்டினில் எமது பாடசாலை உயர்தர மாணவர்களின் ஆக்கங்களை தாங்கி "துமி-4" எனும் நூலாக இவ்வாண்டில் வெளியிடுவதில் பெருமையடைகின்றேன். திருகோணமலையில் உள்ள 1C,1AB பாடசாலைகளிலும் நடைபெறும் உயர்தர பிரியாவிடை வைபவத்தில் மாணவர் ஆக்கத்துடனான எந்த ஆவணங்களும் வெளியிடப்படுவதில்லை. ஆனால் இன்று நான்காவது தடவையாக தி/செல்வநாயகபுரம் இந்து மகாவித்தியாலய உயர்தர ஒன்றிய மாணவர்களினது கூட்டு முயற்சியினால் துமி-4 சஞ்சிகை வெளியிடப்படுகிறது.

சஞ்சிகை உள்ளடக்கங்கள் அனைத்தும் எமது பாடசாலை உயர்தர மாணவச்செல்வங்களின் கலைப் படைப்புகளாக உள்ளன.இது இவர்களின் திறமைகளின் எடுத்துக்காட்டாகவும் என்றும் பாடசாலை நாட்களின் நினைவலைகளாகவும் திகழும் பாரிய ஆவணமாகும். ஒவ்வொரு மாணவரும் தமது வாழ்நாள் முழுவதுமன்றி "இறந்தும் இறவாமல் வாழும் படைப்பாளிகள்" எனும் ரீதியில் துமி ஆக்கத்தின் மூலம் தமது பெயரையும் திறமையையும் ஆவணப்படுத்தியுள்ளார்கள். மேலும் இப்பாடசாலையை கடமையேற்று 4 வருடங்களில் ஏழாவது நூலிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி

திரு.க.பேரானந்தம்
அதிபர்
தி/செல்வநாயகபுரம் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் வாழ்த்துச்செய்தி



2014ம் ஆண்டில் வெளிவரும் துமி-4 சஞ்சிகைக்கு ஆசிச் செய்தியை வழங்குவதில் மிகவும் பெருமையடைகின்றேன். க.பொ.த உயர்தர மாணவர் ஒன்றியமானது இவ்வாறான வெளியீடுகளில் மாணவர்களின் இலை மறை காயாய் மறைந்து காணப்படுகின்ற பல்வகையான திறமைகளை இவ் வெளியீடுகளின் மூலம் இனங்காணக் கூடியதாக இருக்கின்றது.

மேலும் ஒரு நிறுவனத்தின் வளர்ச்சியானது அதன் தலைமைத்துவத்தில் தான் தங்கியுள்ளது. என்பதினை யாவரும் ஏற்பார்கள் அந்தவகையில் இந்நிறுவனத்தின் வளர்ச்சியானது தலைமையாளரின் மூளைப்பலத்துடன் அவரது ஆளுமை, இறைபக்தி, தியானம் என்பவற்றின் ஊடாக உள்ளுணர்வின் மூலம் எதிர்வருவதை உணர்ந்து செயற்படும் தன்மைகள் ஊடாக ஓர் கல்விக்கான சமூக மாற்றத்ததை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

இவ்வருடத்தில் க.பொ.த உயர்தரத்தில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இறைவனின் அருள் கிடைக்கப்பெற வேண்டும் என்று எனது நல் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். இவ் துமி இதழ்கள் துளியாய் மண்ணில் தொடர்ச்சியாக தூரும் என்ற நம்பிக்கையோடு எனது இதயபூர்வமான வாழ்த்தினை தெரிவிக்கின்றேன்.

திரு.க.ப.யேகதீஸ்வரா
பிரதிஅதிபர்
தி/செல்வநாயகபுரம் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் வாழ்த்துச்செய்தி



ஒவ்வொரு வருடமும் க.பொ.த(உ/த) மாணவர்களால் மிகவும் திறமையுடன் வெளியிடப்படும் துமி என்னும் சஞ்சிகை இவ்வருடத்தில் நான்காவது வருடத்தை வெற்றிகரமாக கடந்துள்ளது என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கின்றேன். பிரதி அதிபர் என்ற வகையில் துமி- 4 சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் எண்ணற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ்வருடத்தில் க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவச் செல்வங்களுக்கு எனது மனப்பூர்வமான இனிய வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன், துமியானது இனிவரும் காலங்களில் இன்னும் இன்னும் விண்ணைத்தொட உயரும் என்ற நம்பிக்கையில் எனது இதயபூர்வமான நல்வாழ்த்தினை தெரிவிக்கின்றேன்.

திரு.R.P.ராஜசுரேஸ்
பிரதிஅதிபர்
தி/செல்வநாயகபுரம் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாசிரியர் உரை



தி/செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலய உயர்தர மாணவர்களின் எண்ணங்களைத் தாங்கி தூமியின் நான்காவது இதழ் வெற்றிகரமாக வெளிவந்துள்ளது.உயர்தர மாணவர்களின் உள்ளார்ந்த பல்வகைத் திறமைகளையும் மேம்படுத்தும் பொருட்டு புதிய சிந்தனைகளுடன் தூமி துளிகளாக மிளிர்வதற்கும் வெளிவருவதற்கும் காரணகர்த்தாவாகவும் ஊக்குவிப்பாளருமான எமது வித்தியாலயத்தின் அதிபர் திரு.க.பேரானந்தம் ஐயா அவர்களுக்கு எனது உளம் கனிந்த நன்றிகளை இச்சந்தர்ப்பதில் தெரிவித்து கொள்கின்றேன்.

"நழுவ விடக் கூடாது - வாய்ப்பு" என்பதற்கு இணங்க எமது பாடசாலை மாணவர்கள் தமது பாடசாலை கால வாழ்வில் தமக்கான சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அவர்களின் அடையாளங்களாக தூமி திகழும் எனக்கூறி தொடர்ந்தும் இத்தூமி சிறந்த சிந்தனையின் வடிவமாக உருவெடுக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

பொறுப்பாசிரியர்
திருமதி.சி.ஜெயரூபன்
(உயர்தர மாணவர் மன்றம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் குழாம் - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் பார்வையில்



விரைந்து கொண்டிருக்கின்ற விந்தை உலகின் வியத்தகு சாதனைகள் பதிவுகளாய் ஆக்கங்களாய் என்ற வடிவில் ஆழமாய் பதிந்துள்ளன.இவை உங்கள் மனதில் மின்னல் போன்று அறிவு ஒளியை பெறச் செய்யும்

"நூலே ஆகுமாம் நுண்ணறிவு" என்பதற்கிணங்க செந்தமிழ் ஆகிய பன்னீர் துளிகளால் ஆன சிந்தனைகளை அழகிய அறிவுக் கோலமாக்கி ஆழ் மனதிலே வேரூன்றச் செய்து விருட்சமாக்குவதே எம் நோக்கமாம்.

எம் துமிகள் என்றோ துளியாகலாம் துமிகள் துளியாகி உங்கள் உள்ளங்களில் பெருக்கெடுத்து வெள்ளமாகும் நாள் விரைவிலே உருவாகும் என்ற நம்பிக்கையுடனும் அனைத்து பெருந்தகமைகளினதும் வாழ்த்துச் செய்திகளுடனும் இந்நூல் பிரசுரிக்க இறைவனை வேண்டுகிறேன்.

செல்வி: T .சுபி
2014 கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர மாணவர் ஒன்றியக்குழு

| | | |
|---|---|---|
| போசகர் | : | திரு.க.பேரானந்தம் |
| பொறுப்பாசிரியர் | : | திருமதி.எஸ்.ஜெயரூபன் |
| தலைவர் | : | எஸ்.ஸயன் |
| செயலாளர் | : | என்.ஜனனி |
| பொருளாளர் | : | ஜி.எரோசன் |
| இதழாசிரியர் | : | ரி.சுபி |

# உயர்தர ஆசிரியர் குழு

01. திருமதி.ரி.ஜோன்பற்றிக் (பகுதித்தலைவர்)
02. திருமதி .ஜி.தங்கவேல்
03. திரு .எஸ்.செந்தூரன்
04. திருமதி.எஸ்.ஜெயரூபன்
05. திருமதி .ஜெ.சுதர்சினி
06. திருமதி.ஜெ.சிறீதரன்
07. திருமதி.யு.யோகராசா
08. திரு.எஸ்.விமலானந்தம்
09. திருமதி.ஆர்.ஜெயகாந்தன்
10. திருமதி.எம்.ரூபகுமார்
11. திருமதி.கே.சரிஷ்குமார்
12. திருமதி.பி.சுதாகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


01. இலங்கையும் பொதுநலவாயமும் 1
02. உலகசுற்றுச் சூழல் தினத்தின் கடந்தகால... 4
03. ஆண், பெண் மூளைகள் பற்றியதகவல்கள் 5
04. சர்வதேச குறியீடுகள் 6
05. Nelsan Mandela 7
06. கின்னஸ் 8
07. இலங்கையின் அதிவேக நெடுஞ்சாலைகள் 10
08. பிரியாத நட்பு 11
09. இலங்கை நாடளுமன்றம் 12
10. சிந்தனைத் துளிகள் 13
11. கூறக்கூடியதும் கூறமுடியாததும் 14
12. நேரத்தின் மதிப்பு 15
13. மனித உரிமைகள் 16
14. நினைவுகளுடன் 17
15. சர்வதேச உதைப்பந்தாட்டம் 18
16. நண்பன் 20
17. அறிவை வளர்க்கும் அறிவியல் தகவ்வகள் 21
18. பயணங்கள் 22
19. Mother Teresa 23
20. பொறுமை என்றும் பெருமை 25
21. முகநூல் 27
22. உணர்வுகளின் வெளிப்பாடு 28
23. புதிய புற்றுநோய் தடுப்புமருந்து 29
24. ஐக்கியநாடுகள் சபை 30
25. அறிவியல் தகவல்கள் 31
26. அன்பு 32
27. ஒலிம்பிக் நடைபெற்ற நாடுகள் 33
28. 2013ம் ஆண்டின் நிகழ்வுகள் 35




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. Mystic Masters Speak 36
30. நீ சிறந்த மனிதனாய் மாற 37
31. டைனோசர் இனம் அழிவு, விஞ்ஞானிகள் புதியவிளக்கம் 38
32. உணர்வுமிக்க கருத்து கலசம் 40
33. கல்பனாவும் நாசாவும் 42
34. சிகிரியா 45
35. அறிவுக்கு விருந்து 46
36. மிகப்பெரிய சூரியச் சூறாவளி 47
37. உயர் கல்வி நிறுவனங்களில் இடம்பெறும் பகிடிவதை நன்மையா? தீமையா? 49
38. கவிதை 52
39. மூடநம்பிக்கைக்கு ஓர் முற்றுப்புள்ளி 53
40. வணிகத்தின் வெற்றிபுத்துருவாக்கத்திறனில் 55
41. நிறுத்தளவையும் முகத்தலளவையும் மாற்றுக் காரணிகள் 60
42. க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான புதிய தொழினுட்பதுறை 64
43. பல்கலைக்கழக அனுமதி முறையில் Z Score ஒருநடை முறைநோக்கு 69
44. இலங்கையில் பல்கலைக்கழக முறைமை 71
45. கற்பித்தல் பணியில் தகவல் தொடர்பு நட்பத்தின் பங்கு 76
46. உயர்தர மாணவர்கள் விபரம் 79
47. நன்றி பகிர்கின்றோம் 85



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையும் பொதுநலவாயமும்

தேசிய சர்வதேச அரசியல் பரப்பில் மிகுந்த கவன ஈர்ப்பு பெற்றுள்ளதாக சர்வதேச ஸ்தாபனங்கள் விளங்குகின்றன. சர்வதேச ஸ்தாபனங்கள் என்பது உரு ஒழுங்குபடுத்தப்பட்ட அல்லது அலுவலக மயப்படுத்தப்பட்ட உடன்படிக்கையினூடாக இரண்டிற்கு மேற்பட்ட நாடுகள் உருவாக்கிக் கொள்ளும் அமைப்பாகும்.

இவ்ஸ்தாபனங்கள் அங்கத்துவ நாடுகளின் நலனை கூட்டாகப் பேணுவதனை நோக்காக கொண்டு செயற்படுகின்றன. தற்கால உலகில் 250ற்கும் மேற்பட்ட அரசுகளுக்கு இடையிலான சர்வதேச ஸ்தாபனங்களும் இயங்கி வருவதாக "பிரிட்டானிக்க" எனும் கலைக்களஞ்சியம் குறிப்பிடுகின்றது. டுபாயில் இ எம்றிக் குறூஸ் ஆகிய ஐரோப்பிய எழுத்தாளர்களின் கருத்துப்படி கிரேக்க நகர அரசுகளில் முதன் முதலாக சர்வதேச நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன.

ஆனால் அவை 19ம் நூற்றாண்டு காலம் வரை தற்கால நிறுவன அமைப்பை ஒத்தவைகளாக உருப்பெறவில்லை. இந்த வரிசையில் பொதுநலவாயம் என்பது 54 அங்கத்துவ நாடுகளை உள்ளடக்கிய ஒரு தனியார் நிறுவனமாகும்.

இது ஜனநாயக மற்றும் அபிவிருத்தி பரிமாற்ற இலக்குகளை நோக்கி அங்கத்துவ நாடுகளிடையே உதவி நல்குதல், ஒன்று சேர்ந்து செயற்படல் என்ற தொனிப்பொருளில் இயங்கிக் கொண்டிருந்தது. பொதுநலவாயம் என்பது பிரித்தானியாவின் ஏகாதிபத்திய ஆட்சிக்கு உட்பட்டிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளின் கூட்டாகும். அத்துடன் இந்நாடுகள் இன்று வரை நட்பு ரீதியான மற்றும் நடைமுறைத் தொடர்புகளை ஒன்றுடன் ஒன்று பேணி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுநலவாயமானது பல்லின மொழி, கலாச்சார வேறுபாடுகளை கொண்ட இரண்டு பில்லியன் மக்களை உள்ளடக்கிய ஸ்தாபனமாகவும் உலகின் சிலபெரிய, சிறிய பணம் படைத்த மற்றும் ஏழ்மை நாடுகளை தனது அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது.

ஆபிரிக்க, ஆசிய, அமெரிக்க, கரிபியன், ஐரோப்பிய மற்றும் தென்பசுபிக் நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றது. தற்கால சர்வதேச உறவுகளில் இவ்வமைப்பின் பங்கினை குறைத்து மதிப்பிட முடியாது. அதிலும் குறிப்பாக இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து இந்நாட்டின் வெளிவிவகார கொள்கையில் பொதுநலவாயம் முக்கிய இடத்தினை பிடித்துள்ளது

இப் பின்னனியில் இக்கட்டுரை பொதுநலவாய நிறுவனத்தின் தோற்றம், வரலாற்று வளர்ச்சி, சர்வதேச உறவுகளில் அதன் வகிபாகம் பொதுநலவாயத்தில் இலங்கையின் அங்கத்துவம், இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்களின் மகாநாடு, அது தொடர்பில் உள்ள விமர்சனங்கள் குறித்து அலசுகின்றது.

வரலாறு நவீன பொதுநலவாயம் சுமார் 60 வருடத்தை கடந்துள்ள போதிலும் 19ம் நூற்றாண்டில் இதற்கு தூபமிடப்பட்டது. பிரித்தானிய சாம்ராஜ்யத்தில் ஆட்சிக்கு உட்பட்டிருந்த கனடா 1867ம் ஆண்டில் மட்டுப்படுத்தப்பட்ட சுய ஆட்சிக்கான அந்தஸ்தினை பெற்றுக்கொண்டது. இதனை அடுத்து பிரித்தானிய சாம்ராஜ்யம் படிப்படியாக மாற்றத்திற்கு உட்பட ஆரம்பித்தது. அவ்வேளை பிரித்தானிய அரசாங்கத்ததின் அரசியல் பிரமுகரான ரோஸ்பெரி பிரபு இம்மாற்றத்தினை பிரித்தானிய சாம்ராஜ்யத் திலிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளின் கூட்டமைப்பு என அழைத்தார். இவரது விளக்கமே பின்னர் இந்நிறுவனத்தின் பெயராக பரிணமித்தது.


இதனை தொடர்ந்து சாம்ராஜ்யத்தின் ஏனைய பகுதிகளும் சுய ஆட்சி அந்தஸ்தினை பெற்றுக்கொண்டன. அவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1901) நியூஸ்லாந்து (1910) ஐரிஸ்சுதந்திர அரசு (1922) முதலாம் உலக யுத்தத்தினை தொடர்ந்து சுயஆட்சி அரசுகள் புதிய அரசியல் அமைப்பு ரீதியான வரையறைகளை ஏற்படுத்திக் கொண்டதுடன் மீள் வடிவமைக்கப்பட்ட உறவினை பிரித்தானியாவுடன் பேணவும் ஆரம்பித்தன. எவ்வாறாயினும் 1926ம் ஆண்டு இடம் பெற்ற சாம்ராஜ்ய மாநாட்டில் பங்கேற்ற நாடுகளின் பிரதமர்கள் அறிக்கை மூலமாக டொமினியன் அந்தஸ்தை பெற்றுக்கொண்ட நாடுகள் பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் சுய ஆட்சிக்கான சமூகம் என்ற வரைவிலக்கணத்தினை வகுத்துக் கொண்டதுடன் அவை சம அந்தஸ்துள்ளவை என்றும் ஒன்றினைப் போல் ஒன்று அவற்றின் வெளிவிவகாரங்களில் தலையிடத் தேவையில்லை என்றும் முடிவெடுத்ததுடன் அனைத்து நாடுகளும் முடிவின் கீழ் பொதுவாக ஒன்றிணைவதாக தீர்மானித்தனர். அத்துடன் சுதந்திரமாக பிரித்தானியாவின் முன்னைய சாம்ராஜ்ய ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளின் கூட்டில் அங்கத்துவத்தினை பெற்றுக் கொண்டன. இவ்வகையில் இவ்வமைப்பானது 1931டில் பிரித்தானிய சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது.

செல்வி. ர. டெல்சியா
12 கலைப்பிரிவு



**வெற்றி பெற்றபின் தன்னை அடக்கி வைத்துக்கொள்பவன்,**
**இரண்டாம் முறையும் வென்ற மனிதனாவான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சுற்று சூழல்தினத்தின் கடந்தகால ஆண்டுகளுக்கான கருப் பொருள்கள்

| இல | ஆண்டு | கருப்பொருள் |
|---|---|---|
| 01 | 2000 | சுற்று சூழல் நூற்றாண்டு-செயல்ப்படும் நேரம் |
| 02 | 2001 | வாழ்க்கையை இணைப்போம் |
| 03 | 2002 | பூமிக்கு ஒரு வாய்ப்பு |
| 04 | 2003 | தண்ணீர் - அதற்காக இரண்டு மில்லியன் மக்கள் இறப்பு |
| 05 | 2004 | தேவை கடல் மற்றும் சமுத்திரங்கள் இறப்பு அல்லது வாழ்வு? |
| 06 | 2005 | பசுமை நகரங்களுக்காக |
| 07 | 2006 | பாலைவனங்கள் மற்றும் பாலைவன மயமாக்கல் தரிசு நிலங்களை கைவிடாதீர் |
| 08 | 2007 | உருகும் பனி ஒரு பாதிப்பை ஏற்படுத்தும் விடயம் |
| 09 | 2008 | தீயபழக்கத்தை உதறுவோம் - குறைந்த கார்பன் பொருளாதாரத்தை நோக்கி |
| 10 | 2009 | வானிலை சவாலை எதிர்கொள்ள ஒன்றுபடுவோம் |
| 11 | 2010 | பல உயிர்கள், ஒரே பூமி, ஒரே எதிர்காலம் |
| 12 | 2011 | காடுகள் - இயற்கை உங்கள் சேவைக்கு |
| 13 | 2012 | பசுமைப் பொருளாதளரம் |
| 14 | 2013 | யோசி, சாப்பிடு, சேமி |
| 15 | 2014 | சிறிய தீவுகள் மற்றும் காலநிலை மாற்றங்கள் |

செல்வி. த. தட்சாயினி
தரம் - 13 கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண் பெண் மூளைகள் பற்றிய புதிய தகவல்கள்

ஆண்கள் மற்றும் பெண்களின் மூளையை பற்றி நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், ஆண்கள் மற்றும் பெண்களின் திறனை பற்றி கூறப்படும் சில பாரம்பரியமான கருத்துகள் உண்மை என்று கண்டறியப்பட்டுள்ளது.

ஆண்களால் ஒரு வரைபடத்தை வாசிக்க முடியும், இதற்கு மாறாக, பெண்களோ வழி கேட்பார்கள். ஆனால் ஒரே நேரத்தில் பல பணிகளை செய்வதிலும் சிறந்து விளங்குவார்கள்.

பெண்களின் மூளைகளில் இடது மற்றும் வலது அரைக் கோளத்திற்கு இடையே உள்ள நரம்பு இணைப்பு சற்று அதிக அளவில் காணப்படுவதாக ஆய்வாளர்கள் கிட்டத்தட்ட ஆயிரம் மூளைகளில் நடத்தப்பட்ட ஸ்கேன் என்ற பரிசோதனை மூலம் கண்டறிந்துள்ளனர்.

இதற்குமாறாக, முன்னிருந்து பின்பக்கம் இணைக்கப்பட்டுள்ள ஆண்களின் மூளை நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செய்கிறது. உணர்ந்து அறிந்து கொள்ளும் ஆற்றலைப் பெற்றுள்ளது.

ஆனால் குழந்தையிலிருந்து வளரும் பொழுது ஒருவரின் பாலின வேறுபாடுகள் சற்று தாமதமாகவே தோன்றும். 13 வயதிற்கு கீழ் இருக்கும் சிறார்களில் சிலரில் தான் இந்த வேறுபாடுகள் காணப்பட்டன. ஆனால் பதின்பருவத்தினரிடமும் இளைஞர்களிடமும் இந்த வேறுபாடுகள் தெளிவாக காணப்பட்டன.

செல்வன். கௌ.எரோசன்
13 வர்த்தகப்பிரிவு (2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச குறியீடுகள்

| | | |
|---|---|---|
| 01. | வெண்புறா | :- சமாதானம் |
| 02. | சிவப்புச்சக்கரம் | :- வளர்ச்சி |
| 03. | செஞ்சிலுவை | :- மருத்துவ உதவி |
| 04. | தலைகீழான கொடி | :- துன்பம் |
| 05. | தீப்பந்தம் | :- ஒலிம்பிக் |
| 06. | தாமரை | :- பண்பாட்டு நாகரீகம் |
| 07. | வெள்ளைக் கொடி | :- சமாதானம் |
| 08. | மஞ்சள் கொடி | :- தொற்று நோய் |
| 09. | பச்சை விளக்கு | :- அனுமதி |
| 10. | சிவப்பு கொடி | :- மருத்துவமனை |
| 11. | கையில் கறுப்புத் துணி | :- துக்கம் |
| 12. | மேல் நோக்கி செங்குத்தான கொடி | :- வெற்றி |

செல்வன். ப.ஆனந்தராசா
12 வர்த்தகப்பிரிவு (2015)

நாளை என்பது மிகமிகத் தாமதமாகும். இன்று முதலே வாழ்க்கையைச் சிறப்பாக நடாத்திக் காட்டுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NELSAN MANDELA

## HIS PERSONAL DETAILS

| | | |
|---|---|---|
| Born | - | 18 July 1918 |
| Died | - | 05th December 2013 (Geed 95) |
| Nationality | - | South African |
| Political Party | - | African National congress |
| Children | - | Them be kill Mandela, Makazi we Mandela |
| Occupation | - | Social Activist Politician |
| Profession | - | Lawyer |
| Awards | - | Bharat Ratha , Noble Peace prize, Order Of Lenin Presidential medal |

Internationally Mandela was secretary general of the non – A ligned movement from 1998 to 1999

Miss. K. Keerthana
12 Arts (2015)



பிறர் குற்றம் காண்பதும் தன் குற்றம் மறப்பதுமே
மடைமையின் முழு அடையாளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கின்னஸ்

கின்னஸ் உலக சாதனைகள், (Guinness World Records), ஒவ்வொரு ஆண்டும் மனிதராலும், இயற்கை நிகழ்வுகளாலும் ஏற்படுத்தப்படும் உலகளாவிய சாதனைகளை தொகுத்து வழங்கும் புத்தகமாகும். இந்த புத்தகமே காப்புரிமை பெற்ற புத்தக விற்பனையில் சாதனை படைத்துள்ளது.

1954ஆம் ஆண்டு முதன் முறையாக சாதனைகள் அடங்கிய புத்தகமொன்றினை ப்லீட்ஸ்ரீரீட் செய்திதாளுடன் இணைத்து இரட்டையர்களான நொரிஸ் மற்றும் ரோஸ் மெக்வேர்டர் விநியோகித்தனர். இவர்கள் 1000 பிரதிகளை அச்சிட்டு இலவசமாக வழங்கினர். இதற்கு அடுத்த வருடமே 1955ஆம் முதன் முறையாக அதிகாரபூர்வமான கின்னஸ் புத்தகம் (Guinness Book ofRcords) என்ற பெயரில் பிரித்தானியாவில் வெளியாகி பெரும் வரவேற்பினைப் பெற்றது.

அன்றிலிருந்து இன்று வரையில் 26 மொழிகளில் 100 இற்கும் அதிகமான நாடுகளில் 115 மில்லியனுக்கும் அதிகமான பிரதிகள் விற்பனையாகியுள்ளன. அதிகளவில் விற்பனையாகும் புத்தகம் மட்டுமன்றி அதிகளவில் திருடப்படும் புத்தகங்களிலும் கின்னஸ் புத்தகம் ஒன்று எனத் தெரிவிக்கப்படுகின்றது.

**கின்னஸ் உலக சாதனைகள் பதிப்பு**

| | | |
|---|---|---|
| நூலாசிரியர்கள் | :- | கிரைகு கிளென்டே (தொகுப்பாசிரியர்) |
| ஓவியர் | :- | ஐயன் புல், ட்ரூடி வெப் |
| அட்டைப்பட ஓவியர் | :- | யேங் பூன் |
| நாடு | :- | UK |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மொழி | :- | ஆங்கிலம், அரபு, போர்த்துக்கீசம், சீனம், குரோவாசியம், செக் மொழி, டேனிய மொழி, டச்சு, எசுத்தோனியம், ஃபின்னியம், பிரெஞ்சு, ஜேர்மன், கிரேக்கம், எபிரேயம், அங்கேரியம், இசுலேன்சுகம், இத்தாலிய மொழி, சப்பானியம், இலத்வியம், நோர்வீசியம், பொலிஷ், உருசியம், சுலோவேனியம், சுலோவாக்கியம், எசுப்பானியம், சுவீடியம், துருக்கியம், பல்கோரியம். |
| தொடர் | :- | கின்னஸ் உலக சாதனைகள் |
| துறைகள் | :- | உலக சாதனைகள் |
| பாணி | :- | தகவல் |
| பதிப்பகர் | :- | ஜிம் பட்டிசன் குழுமம் |
| பதிப்புத் திகதி | :- | 1955 - நடப்பு |
| பக்கங்கள் | :- | 288 (2003-2009)<br>289 (2008)<br>287 (2010)<br>288 (2011) |
| ஐஎஸ்பிஎன் சுட்டெண் | :- | 978-1-904994-37-4 |

செல்வன். பா. அருள்காந்
13 வர்த்தகப்பிரிவு (2014)

வாழ்வதும் வாழ்விடுவதும் நமது வாழ்க்கைத் தத்துவங்களாக ஆக்கிக் கொள்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அதிவேக நெடுஞ்சாலைகள்

| Road Number | Name | Route | Length (km) | Opened |
|---|---|---|---|---|
| E01 | Colombo – Matara Expressway (also known as Southern Expressway)<br>இலங்கையின் முதலாவது அதிவேக நெடுஞ்சாலை<br>தெற்கு அதிவேக நெடுஞ்சாலை/ மாத்தறை அதிவேக நெடுஞ்சாலை | Kottawa - Matara<br>கொட்டவை–மாத்தறை | 128 | 2011 (Kottawa-Galle section)<br>2014 (Galle-Matara section) |
| E02 | Outer Circular Expressway<br>கொழும்பு வெளிவட்ட அதிவேக நெடுஞ்சாலை | Kottawa-Kaduwela<br>கொட்டாவை - கடுவெல | 11 | 2014 |
| | | Kaduwela-Kadawatha | 8.9 | completed this year 2014 (under construction) |
| | | Kadawatha-Kerawalapitiya | 9.3 | completed next year 2015 (under construction) |
| E03 | Colombo – Katunayake Expressway<br>இலங்கையின் இரண்டாவது அதிவேக நெடுஞ்சாலை<br>கொழும்பு – கட்டுநாயக்கா - நீர்கொழும்பு அதிவேக நெடுஞ்சாலை | New Kelani Bridge-Katunayake<br>புதிய களனிப்பாலம் - கட்டுநாயக்கா | 25.8 | 2013 |
| E04 | Colombo – Kandy Expressway / Northern Expressway<br>கொழும்பு–கண்டி அதிவேக நெடுஞ்சாலை<br>வடக்கு அதிவேக நெடுஞ்சாலை | Kadawatha-Katugastota<br>கடவத்த– கட்டுகஸ்தோட்ட | 98.9 | Planned |
| Total Distance | | | 281.7 | |

செல்வன். ர.ராஜ்கரன்
13 வர்த்தகப்பிரிவு (2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியாத நட்பு

சின்ன சின்ன கதை பேசி
சிரித்து மகிழ்வதற்காய்
சென்ற பல பொழுதுகளில்
சேர்ந்திருந்தோம் நாம்...!

சொந்தபந்தம் எதுவுமின்றி
சொந்த கதை பல பேசி
நித்தம் நித்தம் நீண்ட தூரம்
நினைவுகள் பல பகிர்ந்தோம்...!

உன் சுமைகள் உட்புதைந்தே
என் பாரம் தோள் தாங்கி
ஏற்றம் காண்பதற்காய்
என்னுடனே உழைக்கின்றாய்...!

பாசமென்னும் பாத்திரத்தில்
வேசமென்னும் உடையணிந்து
வெறுப்புடனே கதை பேசி
வெட்டிச் செல்ல நினைத்தாலும்
முடியாமல் போகிறது
உன்அன்பு பேச்சு...!

உலகங்கள் பல தாண்டி
உறவேதும் இல்லாத
உள்ளத்து உணர்வாய்
இணைந்திட்ட எம் நட்பு
உயிர் பிரியும் வரை பிரியாது...!

செல்வி. ஜோ.டர்சிகா
13 வர்த்தகப்பிரிவு (2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாடாளுமன்றம்

## PARLIAMENT OF SRILANKA

1. வகை :- ஓரவை முறைமை
2. சபாநாயகர் :- சமல் ராஜபக்ச, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (22 ஏப்ரல் 2010 முதல்)
3. பிரதி சபாநாயகர் :- சந்திமவீரக்கொடி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (22 ஏப்ரல் 2010 முதல)
4. கட்டமைப்பு இருக்கைகள் :- 225

அரசியல் குழுக்கள்
- ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (144)
- ஐக்கிய தேசிய முன்னணி (60)
- தமிழ் தேசியக் கூட்டமைப்பு (14)
- சனநாயகதேசியக் கூட்டமைப்பு (7)

5. தேர்தல்கள் :- இலங்கை கடைசித்தேர்தல் நாடாளுமன்ற தேர்தல் 2010
6. கூடுமிடம் :- நாடாளுமன்றக் கட்டடம்.....கோட்டை

செல்வன். செ. தினேஸ்குமார்
12 வர்த்தகப்பிரிவு (2015)

**உண்மை புறப்பட ஆரம்பிக்கும் போது பொய் பாதி உலகை வலம் வந்திடும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

01. தன்னுடைய கடமைகளை ஒழுங்காகவும் முறையாகவும் செய்யும் சக்தியுடையவனே தலைசிறந்த குடிமகன்.

02. பிறரை வாழ்வித்து வாழவும், பிறரை மகிழ்வித்து மகிழவும் கற்றுக் கொள்ள வேண்டும்.

03. ஆர்வம் தோன்றுவது இயற்கை அதைச் செயற்படுத்தும் திறமை முயற்சியால் பெறக்கூடியதாகும்.

04. உழைப்பின்றி செல்வம் வராது செல்வ செழிப்பின் ஊற்றுக்கண் மகிழ்வோடும் கடமையுணர்வோடும் திட்டமிட்ட வகையில் உழைப்பது தான்.

05. பெய்கின்ற தண்ணீரை தனக்கு உணவாக ஏற்றுக்கொள்ளாத செடி கொடிகள் செழித்து வளராதது போல கற்கின்ற கல்வியை அந்தக் கல்வியின் முலம் கிடைக்ககூடிய சிந்தனையை உணவாக ஏற்றுக்கொள்ளாத் குழந்தைகள் சிறந்து வாழமுடியாது.

06. வானமழை பொழிந்தால் மண்ணில் மரம் செடிகொடிகள் தழைக்கும் என்பது போல மனித மனத்தில் அன்பு மழை பொழந்தால் மனித சமுதாயம் செழிக்கும்.

07. எதிலும் எப்போதும் மிகவும் கவனமாக இருந்தால் தான் வெற்றி வரும்.

08. பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக மீணடும் உன்னிடம் திருப்பி வந்து சேர்ந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. உன் வாழ்க்கையில் நீ சந்திக்கும் தோல்வி என்னும் பூக்களை சேர்த்து வை அதுவே வெற்றி என்னும் மாலையாக கோர்த்து உன்னை சேரும்.

10. நீ சுவாசிக்கும் ஒவ்வொரு சுவாசமும் உனது மரணத்தை நோக்கி நீ எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிகளாகும்.

செல்வி. ச.கிஷா
12 வர்த்தகப்பிரிவு (2015)

## கூறக்கூடியதும் கூறமுடியாததும்

சொல்வதனால் குறைந்துபோகும் விடயங்கள் இரண்டு இருக்கின்றன. அவை என்ன தெரியுமா? புண்ணியமும் பாவமும் தான். நீ செய்த புண்ணியங்களை தர்மங்களை நீயே எடுத்துச் சொல்வதனால் புண்ணியம் குறையும். நீ செய்த பாவங்களை நீயே பிறரிடம் கூறுவதனால் பாவம் குறையும். குறைய வேண்டியது பாவம். நிறைய வேண்டியது புண்ணியம் ஆதலால் நீ செய்த புண்ணியத்தைக் கூறாதே. பாவத்தைக் கூறு.

செல்வன். உ.கருணாகரன்
12 வர்த்தகப்பிரிவு (2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரத்தின் மதிப்பு

- ஒரு ஆண்டின் மதிப்பு என்னவென்று தேர்வில் தோல்வி அடைந்த மாணவனைக் கேளுங்கள்.
- ஒரு மாதத்தின் மதிப்பு என்னவென்று குறைபிரசவத்துக்கு ஆளான ஒரு தாயைக் கேளுங்கள்.
- ஒரு வாரத்தின் மதிப்பை அறிய ஒரு வாரப் பத்திரிகையின் ஆசிரியரைக் கேளுங்கள்.
- ஒரு நாளின் மதிப்பு என்னவென்று தெரிய அன்று வேலை கிடைக்காமல் போன ஒரு தினக்கூலித் தொழிலாளியிடம் கேளுங்கள்.
- ஒருமணி நேரத்தின் மதிப்பு என்னவென்று ரயில் நிலையத்தில் காத்திருக்கும் மனிதரைக் கேளுங்கள்.
- ஒரு நிமிடத்தின் மதிப்பு என்ன வென்று ரயிலைத் தவறவிட்ட பயணியிடம் கேளுங்கள்.
- ஒரு விநாடியின் மதிப்பு என்னவென்று ஒரு விபத்தில் உயிர் தப்பியவரைக் கேளுங்கள்.
- ஒரு மில்லிசெகண்டின் மதிப்பு என்னவென்று ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றவரைக் கேளுங்கள்.

செல்வி. ஜெ.டிகிலா
12 வர்த்தகப்பிரிவு (2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள்

மனித உரிமைகள் என்பது ஒருவருக்கோ ஒரு வர்க்கத்தினருக்கோ சொந்தமானது அல்ல. அனைத்துலக மக்களுக்கும் பொதுவான உரிமையே மனித உரிமை எனப்படும். இவ்வுரிமையானது மனிதன் பிறக்கும் போதே பெற்றுக் கொள்ளும் உரிமையாகும்.

இவ்வுரிமை எமது 1978ம் ஆண்டு அரசியல் யாப்பில் மூன்றாம் அத்தியாயத்தில் 10 பிரிவு தொடக்கம் 17ம் பிரிவு மூலம் எமக்கு சொந்தமான அடிப்படை உரிமைகளை காட்டியுள்ளது.

- ❖ மனசாட்சியின்படி வாழும் சுதந்திரம்.
- ❖ சிந்திக்கும் சுதந்திரம்.
- ❖ அமானுஸ்ய சித்திரவதைகளில் இருந்து மீளும் உரிமை.
- ❖ சட்டமத்தின் முன்னிலையில் சமம் பாதுகாப்பு பெற உரிமை.
- ❖ சட்டத்தினால் குற்றவாளி என நிரூபிக்கும் வரை சுற்றவாளி என ஊகிப்பதற்கான உரிமை.
- ❖ தொழிற்சங்கம் ஸ்தாபிக்க இதில் இணைய உரிமை.
- ❖ தமது மதத்தை கற்க பயன்படுத்த உரிமை.
- ❖ இவ்வுரிமை அதிகாரமிக்கவனாகவோ அல்லது நிர்வாகத்தாலோ உரிமை மீறப்பட்டாலோ அது உரிமை மீறலாகும்.
- ❖ எழுத்தாலான சட்டம் எழுத்தில் இல்லா சட்டம் இவை அனைத்தும் சட்டமே.

செல்வன். ம.லயசாந்
12 கலைப்பிரிவு (2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளுடன்

பிரியமான நினைவுகளுடன் கூடிய
பின்னிப் பிணைந்த நாட்களை நினைக்கையில்
என் வயதும் ஓரிருவருடம் பின்னோக்கி செல்கிறது.

எழுத்து பிழையோடு எழுதிட்ட கவிதைகளும்
இதயத்திலே இடரிவிழுந்திட்ட நட்புகளும்
நாளடியும் ஐவரின் கால்தடம் பதிந்திட
நடைபோட்ட சுவடுகளையும்

நான் நிலைதடுமாறிய போது நிதர்சனம் காட்டி
அன்போடு கூடிய அறிவுரை கூறி
என் துன்பத்தை சிரிப்பால் இன்பமாக்கிய
நாளை மறப்பது என்பது கடினம் தான்

பள்ளிப் பருவத்தில் பழகிய நாட்களை மீட்கையில்
1000 பட்டாம்பூச்சிகள் சிறகடித்து பறக்க
இதயத்திற்கு இதமாய் வீசிய தென்றலை
நினைக்கையில் கண்ணீர் சிந்துகின்றேன்

இவையாவும் கடந்து வந்து சிலவருடம்தான்
ஆனால் உங்கள் ஐவரின் அன்பை
மறுக்கவும், மறைக்கவும் முடியாத நினைவுடன்
பிரிந்து செல்கிறேன் உங்கள் ஞாபகத்தில்.

செல்வி. மோ.தவப்பிரியா
12 கலைப்பிரிவு (2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச உதைப்பந்தாட்டம்

## FOOTBALL *(FIFA)

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் *(FIFA) 1904.05.21 பிரான்ஸ் பரிஸ் நகரில் ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைமையகம் சுவிட்சலாந்தின் சூரிச் நகரில் உள்ளது. 1930 முதல் 4 வருடங்களுக்கு ஒரு முறை நடை பெறுகிறது.

கால்ப்பந்து :- சுற்றளவு 27-28 inches, நிறை 14-16 ounces
மைதானத்தின் அளவு :- 100-110m x 64-75m
FIFA கிண்ணம் :- உயரம் - 36 cm (14.2 inch),
நிறை :- 6.175 kg

| இல | வருடம் | நடைபெற்றஇடம் | வெற்றி பெற்ற அணி |
|---|---|---|---|
| 01 | 1930 | உருகுவே | உருகுவே |
| 02 | 1934 | இத்தாலி | இத்தாலி |
| 03 | 1938 | பிரான்ஸ் | இத்தாலி |
| | 1942 | 2ம் உலக மகாயுத்தம் காரணமாக நடைபெறவில்லை | |
| | 1946 | 2ம் உலக மகாயுத்தம் காரணமாக நடைபெறவில்லை | |
| 04 | 1950 | பிரேசில் | உருகவே |
| 05 | 1954 | சுவிஸ்லாந்து | மே.ஜேர்மனி |
| 06 | 1958 | சுவிடன் | பிரேசில் |
| 07 | 1962 | சிலி | பிரேசில் |
| 08 | 1966 | இங்கிலாந்து | இங்கிலாந்து |
| 09 | 1970 | மெக்சிக்கோ | பிரேசில் |
| 10 | 1974 | மே.ஜேர்மனி | மே.ஜேர்மனி |
| 11 | 1978 | ஆர்ஜன்ரீனா | ஆர்ஜன்ரீனா |
| 12 | 1982 | ஸ்பெயின் | இத்தாலி |
| 13 | 1986 | மெக்சிக்கோ | ஆர்ஜன்ரீனா |
| 14 | 1990 | இத்தாலி | மே.ஜேர்மனி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | வருடம் | நடைபெற்றஇடம் | வெற்றி பெற்ற அணி |
|---|---|---|---|
| 15 | 1994 | அமெரிக்கா | பிரேசில் |
| 16 | 1998 | பிரான்ஸ் | பிரான்ஸ் |
| 17 | 2002 | ஜப்பான், தென்கொரியா | பிரேசில் |
| 18 | 2006 | ஜேர்மனி | இத்தாலி |
| 19 | 2010 | தென்னஆபிரிக்கா | ஸ்பெயின் |
| 20 | 2014 | பிரேசில் | ஜேர்மனி |
| 21 | 2018 | ரஷ்யா | - |
| 22 | 2022 | கட்டார் | - |

செல்வி. இ. தனுஷா
12 கலைப்பிரிவு (2015)



**காலம் சாதகமாக இல்லாதவரை**
**பகைவரைத் தோளில் சுமக்கத்தான் வேண்டும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பன்

முன் அறிமுகம் தேவையில்லாத
முக அழகு பார்க்காத
முதல் உறவு நட்பு

முப்பது நாட்கள் வேண்டாம்
முதல் புன்னகை போதுமே
ஆழகிய நட்பு மலர

கல்விக்கூடங்களும் ஒரு பூங்காவனமே
இங்கே பூக்களாக
நண்பர்கள் பூக்கின்றனர்

நண்பர்கள் அருகில் இருந்தால்
தோல்விகளிலும்
உன் இதழ்கள் புன்னகைக்கும்

உன்னை முழுமையாக ஏற்றுக்கொள்ளும்
ஒரு உண்மையான உறவு
நட்பெனும் தேசமே

செல்வன். S. டனுஜன்
12 வர்த்தகப்பிரிவு (2015)

பேச்சை விடச்செயலுக்கே வலிமை அதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்க்கும் அறிவியல் தகவல்கள்

- நமது கண் இமைகள் ஒரு நிமிடத்தில் 25 முறை துடிக்கின்றன.
- கண் அறுவை சிகிச்சை கி.மு 37 ஆம் ஆண்டிலேயே செய்யப்பட்டுள்ளது.
- ரஸ்யாவில் அமைந்துள்ள லெனின் நூல் நிலையம் உலகில் மிகப் பெரிய நூலகமாகும்.
- இந்தியாவின் புனித நதி என்பது கங்கையை குறிக்கும். இதன் நீளம் 2525km ஆகும்.
- யானைகளின் மேல் உதடும் மூக்கும் இணைந்த பகுதியே துதிக்கையாகும். இதன் துதிக்கை 40000 தசைகளால் ஆனது.
- புத்தர் தமது உபதேசங்களை தெரிவிக்க பயன்படுத்திய மொழி மஹதி எனும் மொழியாகும்.
- சந்திரன் பூமியை ஒரு முறை சுற்றி வர 27 நாட்கள் 7 மணி நேரங்கள் 43 நிமிடங்கள் எடுக்கும்.
- ஈ.ஃ.பில் கோபுரத்தில் 72 பிரெஞ்சு விஞ்ஞானிகளின் பெயர்கள் எழுதப்பட்டன.
- பெண் யானைகள் தங்களது குட்டியை 22 மாதங்கள் வயிற்றுக்குள் சுமந்து குட்டியை ஈனுகின்றன.

செல்வி. சி.ஷர்மிளா
12 கலைப்பிரிவு (2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணங்கள்

என்ன எனக்கு நேர்ந்தது
கண் இமைக்கும் நொடிகளில்
கடந்து போன நினைவுகள்

நினைத்துப்பார்த்தாலே
உடலை நெகிழவைக்கும் தருணங்கள்
இதயம் துடிப்பது போல்
ஏன் இப்படி நேசிக்க வேண்டும்?

ஏதற்காக இப்படி யோசிக்க வேண்டும் என்று
என்னுள் கேள்விகள் எழ
விடைகள் கிடைப்பதற்கு மீண்டும்
என் பார்வையில் நீ விழ

அனைத்தும் மறந்து மீண்டும் எப்பொழுது
உன்னை சந்திப்பேன் என்ற
கேள்வி மட்டுமே மிஞ்சும்

என்தான சாயல் நீங்கி
சிறிது சிறிதாக
உனது தாகம் என்னுள்
எதிரொலிக்கத் தொடங்கியது



என் தனியான
பயணங்களுக்கு
விடைகொடுத்த என்னால்
எனது இதயத்தின் பயணத்திற்கு
விடைகொடுக்க முடியவில்லை

தேடல் நீ என்பதால்
எந்தன் பயணம் தொடரும்
உன் இதய தேசம் சேரும் வரை.........

செல்வி. நா.ஜனனி
13 கலைப்பரிவு (2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MOTHER TERESA

## Blessed Teresa of Calcutta

**Mother Teresa at a pro-life meeting in 1986 in Bonn, West Germany**

| | |
|---|---|
| **Religion** | Roman Catholic |
| **Order** | Sisters of Loreto (1928–1950)<br>Missionaries of Charity (1950–1997) |
| **Personal** | |
| **Nationality** | Indian |
| **Born** | Anjezë Gonxhe Bojaxhiu<br>26 August 1910<br>Skopje, Ottoman Empire |
| **Died** | 5 September 1997 (aged 87)<br>Calcutta, India |
| **Senior posting** | |
| **Title** | Superior general |
| **Period in office** | 1950–1997 |
| **Successor** | Sister Nirmala |

**Blessed Teresa of Calcutta**,[1] born **Anjezë Gonxhe Bojaxhiu** (Albanian: [aÈr[s ÈaTrd'a bTjaÈd'iu]) and commonly known as **Mother Teresa** (26 August 1910 – 5 September 1997), was an ethnic Albanian, IndianRoman Catholicnun.

Mother Teresa founded the Missionaries of Charity, a Roman Catholic religious congregation, which in 2012 consisted of over 4,500



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

sisters and is active in 133 countries. They run hospices and homes for people with HIV/AIDS, leprosy and tuberculosis; soup kitchens; children's and family counseling programmes; orphanages; and schools. Members of the order must adhere to the vows of chastity, poverty and obedience, and the fourth vow, to give "Wholehearted and Free service to the poorest of the poor".

She was the recipient of numerous honours including the 1979 Nobel Peace Prize. In late 2003, she was beatified, the third step toward possible sainthood, giving her the title "Blessed Teresa of Calcutta". A second miracle credited to Mother Teresa is required before she can be recognised as a saint by the Catholic Church.[1] She was admired by many; in 1999, a poll of Americans ranked her first in Gallup's List of Most Widely Admired People of the 20th Century. However, she has also been accused of failing to provide medical care or painkillers, misusing charitable money, and maintaining positive relationships with dictators.

Miss. T. Sugirtha
13 Arts



செய்வதற்கு எப்போதும் வேலை இருக்கவேண்டும்,
அப்போது தான் முன்னேற முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமை என்றும் பெருமை

இன்று அரிதாகி வரும் நற்பண்புகளில் யாவரும் எளிதாகப் பெறமுடியாத நற்பண்பு ஒன்று உண்டென்றால் அது தான் பொறுமை என்னும் நற்பண்பு. இந்த உலகத்தில் எத்தனையோ நல்லது கெட்டது நடந்து கொண்டேயிருக்கின்றன. அதையெல்லாம் இந்தப் பூமி பொறுமையாகப் பார்த்துக் கொண்டும் தாங்கிக் கொண்டும் நம்மை தாயாகக்காத்து வருகிறது. பொறுமை நமக்குப் பலமான மனவலிமையையும் பலநன்மைகளையும் பெற்றுத் தருகிறது.

தனது அனுபவ அறிவினால் மனிதன் பல நல்லியல்புகளைப் பெறுகிறான். அந்த நல்லியல்புகள் அனைத்தையும் திரட்டிப் பார்த்தால் அவையனைத்தும் பொறுமை என்னும் ஒன்றில் அடங்கும். ஒருவன் மெய்யறிவால் பெறுகின்ற பொறுமை மலை போல் உறுதியாய் பூமியைப் போல் எதையும் தாங்கும் சக்தியுடன் கடல் போல் பரந்த உள்ளத்துடன் எத்தகைய துன்பம் வந்தாலும் கொடுமை செய்தாலும் கலங்காது ஏற்றுக்கொண்டு பிறருக்கு கனவிலும் துன்பம் தராது மெல்லிய பூங்காற்றாய் இன்பமே தரும். அத்தகைய பொறுமையைப் பெறுவதற்கு தவவலிமை வேண்டும். அதனாலேயே இறைவனை சாந்த வடிவினனாய் காண்கிறோம்.

பொறுமை என்னும் பண்பினைப் போற்றி நடப்பதால் பல நன்மைகளைப் பெறலாம். பொறுமையுடையவரிடத்தில் அனைத்து நற்குணங்களும் தானே வந்தடையும். அந்த நற்குணங்களில் தலையாயது நான்காகும். அவை அடக்கம், போதும் என்ற மனம், உண்மை, அன்பு என்பனவாகும். இக்குணங்கள் இல்லாதவன் பொறுமை எனும் குணத்தைப் பெறமாட்டான்.

மனிதன் சலனம் சபலம், கோபம், அகங்காரம், ஆணவம் இவைகளைத் தன்னிடமிருந்து எப்போது விடுபடச் செய்கிறானோ அவனிடம் பொறுமை குடிகொள்கிறது. அவன் போக்கில் பணிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் கண்களில் கனிவு இருக்கும், செய்யும் தொழிலில் நேர்மையும் உண்மையும் அன்பும் கலந்திருக்கும், அவனே மனிதருள் மாணிக்கம்.

வண்ணத்தில் நீலமாய் நம் எண்ணத்தில் உயர்ந்த தாய் மண்ணில் வாழும் மனிதனுக்கு பெரும் பயன்களை அளித்திடும் கடல் சான்றோர்களின் உள்ளம் போல் விரிந்து நல்லோர் மனம்பரந்து பெரும்பரப்பாக பொறுமையின் சின்னமாய் தன்னை நாடிவரும் அனைத்து நதிகளையும் அணைத்துக் கொண்டு வானத்தைப் பார்த்து சிரித்த வண்ணம் உள்ளது. மலை மழையையும் வெயிலையும் காற்றையும் தாங்கிக்கொண்டு தன்னைச்சுற்றி மூலிகைச் செடிகளை வளர்த்து பொறுமையுடன் நாடுகளுக்கு அரணாய் விளங்குகிறது. மானுடம் வெல்லும் என்பதை நிலைநாட்ட மனித உருவாய் வடிவெடுத்த இறைவன் ஸ்ரீராமன் இப்பூவுலகில் பொறுமை கொண்டுபட்டத் துயரங்கள் மனிதர்களுக்கு பொறுமையின் மகிமையை இவ்வுலகிற்கு எடுத்துக் காட்டுகின்றன.

பொறுமையை இழந்தவன் எத்தனை நற்பண்புகளை பெற்றிருந்தாலும் கோபம் கொள்ளும் இடத்தில் அவன் பெருமையை அவனே கெடுத்து கொள்கிறான். கோபத்தில் என்ன பேசுவது என்று தெரியாமல் தேவையற்ற வார்த்தைகளை பேசி காலம் முழுதும் அவனே வேதனை அடைகிறான். பொறுமையுடன் இருப்பதே நமக்கும் நம்மை சுற்றி உள்ளவர்க்கும் சிறந்ததாகும்.

M.நிலோஜினி
13 வர்த்தகப்பிரிவு (2014)

விதியை நம்புபவன் எதையும் சாதிக்கமாட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் – FACEBOOK

2004ல் தொடங்கிய இணையவழி சமூக வலையமைப்பு நிறுவனமாகும். ஹார்வர்ட் பல்கலைகழகத்தில் ஒரு மாணவர் மார்க் சக்கர்பார்க் ஹார்வர்ட் மாணவர்களுக்கு ஆரம்பித்து பின்பு வேறு ஐவி லீக் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அனுமதி கிடைத்தது இன்றைய facebook இல் 13 வயதான நபர்கள் சேரலாம். அலெக்சா நிறுவனத்தின் மதிப்பீட்டின் படி இணைய முழுவதிலும் facebook தான் இரண்டாவது மிக பிரபல்யமான இணையத் தளமாகும். ஜீலை 2012 கணக்கெடுப்பின் படி இதில் 800 மில்லியன் உபயோகிப்பாளர்கள் உள்ளனர்.

முகநூலை மார்க் சக்கர்பாக் தன் நண்பர்களான எடுடாரோ சாவ்ரின் டஸ்டின் மாஸ்கோவிட் போன்ற ஹார்வர்ட் நண்பர்களுடன் தொடங்கினார். பிறகு ஐவி லீக்,ஸ்டான்போர்டு பல்கலைகழக மாணவர்களும் முகநூலில் சேர்ந்தனர். பின்னர் ஆப்பிள், மைக்ரோசாப்ட் நிறுவன ஊழியர்களும் முகநூலில் சேர்ந்தனர்.

2008ல் முகநூலில் தலைமையகம் அயர்லாந்து நாட்டின் டப்ளின் நகரில் தொடங்கப்பட்டது. 2011ல் முகநூலின் தலமையகம் மென்லோபார்க், கலிபோர்ணியாவுக்கு மாற்றப்பட்டது.

இந்த இணையத்தளம் உலகின் சிறந்த 100 இணையத் தளங்களுள் ஒன்று என்ற விருதை பி.சி நாளிதழ் மூலம் 2007ல் வென்றது. 2008ல் "மக்கள் குரல் விருது" கிடைத்துள்ளது. நியூஜெர்சி மாணவர்களின் கருத்துப்படி இளங்கலை மாணவர்கள் விரும்பும் இணையத்தளங்களுள் முகநூல் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. 2010ல் சிலிக்கன் பள்ளத்தாக்கில் உள்ள நிறுவனங்களில் சிறந்த படைப்புக்கான விருதை பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்திரேலியாவின் உச்ச நீதிமன்றம் அனுப்பும் நீதி மன்ற சம்மன் அனுப்பக்கூடிய சிறந்த வழியாக முகநூலை தேர்ந்தெடுத்துள்ளது.

**முகநூல் பயன்படுத்தும் முதல் 10 நாடுகள்**
அமெரிக்கா, இந்தோனேசியா, இந்தியா, ஐக்கிய இராச்சியம், துருக்கி, பிரேசில், மெக்ஸிகோ, பிலிப்பைன்ஸ், பிரான்ஸ், ஜேர்மனி.

செல்வன். சு.ஸயன்
13 வர்த்தகப்பிரிவு (2014)

## உணர்வுகளின் வெளிப்பாடு

பகிரந்து கொள்ளும் போது - உன்
சந்தோசம் இரட்டிப்பாகின்றது
வெளிப்படுத்தும் போது சோகம் - உனக்கு
குறைந்து போகின்றது
வாழ்க்கையை வாழ வேண்டும்
வாழ்கையே ஒரு சோகமல்ல
சோகம் வாழ்க்கையின் ஒரு
பகுதி மட்டும் தான்
இழப்பு ஈடு செய்ய முடியாததாய்
இருக்கலாம் - ஆனால்
இழப்பின் மத்தியிலும் முளைக்கும்
உணர்வுகளை வளரவிடுங்கள்
உணர்வுகளின் வெளிப்பாடு
உங்களை சீக்கிரம் குணமாக்கும்

செல்வி. த.கீர்த்தனா
12 கலைப்பிரிவு (2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய புற்றுநோய் தடுப்பு மருந்து

புதிய புற்றுநோய் தடுப்பு மருந்தை மருத்துவ விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இதற்கான மருத்துவப் பரிசோதனை அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவில் உள்ள மருத்துவ மனைகளில் நடந்துவருகிறது.

உலகம் முழுவதும் பலவிதமான புற்றுநோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பலமடங்கு அதிகரித்துள்ளது. இந்நிலையில், மனிதனின் உடலில் இருந்து எடுக்கப்படும் ஸ்டெம்செல்லில் புற்றுநோய்க்கான எதிர்ப்பு மருந்து இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இம்மருந்தில் பக்கவிளைவு அதிகம் இல்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

புற்றுநோயை எளிதாக தீர்க்ககூடிய இம்மருந்து குறித்த மருத்துவ பரிசோதனை அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் நடந்துவருகிறது. இம்மருந்தை புற்றுநோயாளிகளுக்கு டாக்டர்கள் கொடுத்து, மருந்து எந்த அளவுக்கு செயல்படுகிறது என்பதை உன்னிப்பாக கவனித்து வருகிறார்கள்.

மனிதனின் வெள்ளை அணுக்கள் குறைபாடு காரணமாக ஏற்படும் புற்றுநோயை குணப்படுத்துவது கடினமாக இருந்தது. இந்த நோயை புதிய மருந்து மூலம் குணப்படுத்த முடியும் என்று மருத்துவ விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

கே.பி.004 என்று பெயரிடப்பட்டுள்ள இம்மருந்தின் முதல்கட்ட பரிசோதனையானது ஊக்கமளிப்பதாக இருந்ததாகவும், மருந்தை அதிக அளவில் நோயாளிகளுக்கு கொடுத்தாலும் எந்தவித பாதிப்பையும் அது ஏற்படுத்தவில்லை என்றும் விஞ்ஞானிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

செல்வன். உ.பிரசாந்
13 வர்த்தகப்பிரிவு (2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் சபை

உலக நாடுகள் அனைத்தினதும் பொது மன்றமாக இயங்கும் ஓர் அமைப்பே ஐக்கிய நாடுகள் சபை.

இரண்டாம் உலக போர் நடைபெற்ற சமயம் உலக போர் ஒன்று மீள ஆரம்பிக்கபடாமல் இருப்பதற்காக பொது அமைப்பு ஒன்று தோற்றுவிக்கப்பட வேண்டும் என்ற கருத்து உலக தலைவர்கள் மத்தியில் தோன்றியது.

அதன் செயல்வடிவமாகவே ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டது. இதற்கு முன்னோடியாக 1945 ஏப்ரல் 25ம் திகதி ஐக்கிய நாடுகள் சாசனம் தோன்றியது.

1945.06.26 ல் அமெரிக்காவில் சான்.பிரான்சிஸ்கோ நகரில் வைத்து உலக தலைவர்களால் ஐக்கிய நாடுகள் சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதில் 30 நாடுகள் பங்கேற்றன.

1945 ஒக்டோபர் 24ல் நியூயோர்க் நகரில் வைத்து உலகின் முன்னனி சக்திமிக்க நாடுகளின் தலைவர்கள் பலரால் ஐக்கிய நாடுகள் சபை கோலாகலமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வருடாந்தம் ஒக்டோபர் மாதம் 24ம் திகதி ஐக்கிய நாடுகள் சபை தினமாக உலகெங்கும் அனுஸ்டிக்கப்படுகின்றது.

1946ல் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது பொதுக்கூட்டத்தில் 51 நாடுகள் மட்டுமே பங்கேற்றன. ஐ.நா வின் வருடாந்த அமர்வுகள் செப்டம்பர் டிசம்பர் காலப்பகுதியில் நடைபெறுகிறது.

இதன் தலைமை காரியாலயம் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக சமாதானத்தை குறிக்கும் "ஒலிவ்" மரக்கிளை ஐ.நா சபையின் சின்னத்தில் இடம் பெற்றுள்ளது.

ஐ.நா சபை பின்வரும் 6 பிரதான அமைப்புக்களை கொண்டு இயங்கி வருகின்றது.

1. பொதுச்சபை
2. பாதுகாப்புச்சபை
3. பொருளாதாரச்சபை
4. சர்வதேச நீதிமன்றம்
5. செயலாளர் நாயகத்தின் பணிமனை
6. தர்மகர்த்தா சபை

செல்வன். S.தயாபரன்
13 கலைப்பிரிவு (2014)

## அறிவியல் தகவல்கள்

01. ஆஸ்திரியாவின் மிக உயர்ந்த சிகரம் எது?
    கேரியங்கோ
02. தங்கத்தை கரைக்கும் திரவம் எது?
    ஆக்குவா ஜெரிவா
03. விண்வெளியில் பறந்த முதல் பெண்மணி யார்?
    வாலண்டினா
04. உலகில் மிகப்பெரிய மணி எங்கு உள்ளது?
    மாஸ்கோவின் கிரெம்ளினில் உள்ளது 193டன் எடை
05. பாராசூட்டைக் கண்டு பிடித்தவர் ?
    1897ல் ஜாக்ஸ்கார்னரின் என்ற மகரஞ்சுக்காரர்.

செல்வி. சு.பிரசாந்தினி
12 கலைப்பிரிவு (2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு

உலகிற்கு இரண்டு தீபம்
சூரியன் சந்திரன் போல
என் வாழ்விற்கு இரண்டு தீபங்கள்
என் தாயும் தந்தையுமே

இரத்தத்தைப் பாலாக்கி வளர்த்தவள்
என் தாய் போல
வியர்வை இரத்தம் சிந்திய
என் தந்தையுமே

ஈன்றவள் இருக்க விலை மதிப்பு
எதுபோல
இவ்வுலக உறவுகளிலே என்
உறவுகளும் உயர்ந்திடுமே



பசிக்கத் தான் உணவு
தாகத்திற்கு நீர் போல
என் சொந்தமே என் மனதின்
ஊற்றும் உணவுமே.

செல்வன். க.நிதர்சினி
12 கலைப்பிரிவு

தன்னை ஒருவராலும் ஏமாற்ற முடியாது எனச் செருக்கோடு
இருப்பவனே கண்டிப்பாக ஏமாந்து போகின்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் நடந்த இடங்கள் (கோடைக்காலம்)

| வருடம் | இடம் | ஆண்டு | இடம் |
|---|---|---|---|
| 1896 | ஏதென்ஸ், கிரேக்கம் | 1900 | பாரிஸ், பிரான்சு |
| 1904 | செயிண்ட் லூயிஸ், ஐ/அமெரிக்கா | 1908 | இலண்டன், இங்கிலாந்து |
| 1912 | ஸ்டாக் ஹோம்,சுவீடன் | 1920 | ஆண்ட்வெர்ப், பெல்ஜியம் |
| 1924 | பாரிஸ், பிரான்சு | 1928 | ஆம்ஸ்டர்டாம், ஹாலந்து |
| 1932 | லாஸ் ஏஞ்சலீஸ், ஐ/அமெரிக்கா | 1936 | பெர்லின்,ஜெர்மனி |
| 1948 | லண்டன், இங்லாந்து | 1952 | ஹெல்சின்கி, பின்லாந்து |
| 1956 | மெல்போர்ன், ஆஸ்திரேலியா | 1960 | ரோம், இத்தாலி |
| 1964 | டோக்கியோ, ஜப்பான் | 1968 | மெக்ஸிகோசிட்டி, மெக்சிகோ |
| 1972 | ம்யூனிச், ஜேர்மனி | 1976 | மாண்ட்ரீல், கனடா |
| 1980 | மாஸ்கோ, சோவியத் ஒன்றியம் | 1984 | லாஸ் ஏஞ்சல்ஸ், ஐ/அமெரிக்கா |
| 1988 | சியோல், தென்கொரியா | 1992 | பார்சிலோனா, எசுப்பானியா |
| 1996 | அட்லாண்டா, ஐ/அமெரிக்கா | 2000 | சிட்னி, ஆஸ்திரேலியா |
| 2004 | ஏதென்ஸ், கிரேக்கம் | 2008 | பெய்ஜிங், மக்கள் சீனக் குடியரசு |
| 2012 | இலண்டன், ஐ/இராச்சியம் | 2016 | ரியோடி ஜனேரோ, பிரேசில் |

உலகப்போர் சமயங்களில் மட்டும் (1916, 1940, 1944) ஒலிம்பிக்ஸ் நடைபெறவில்லை. இன்றைய ஒலிம்பிக்ஸ் 1896ல் ஏதென்ஸ் நகரில் தான் துவங்கியது. அடுத்த கோடைகால ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கள் 2016ம் ஆண்டில் பிரேசில் நாட்டின் ரியோடி ஜனேரோ நகரில் நடக்கவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனி ஒலிம்பிக்ஸ் நடந்த இடங்கள்

| வருடம் | இடம் | ஆண்டு | இடம் |
|---|---|---|---|
| 1924 | சாமொனிக்ஸ், பிரான்ஸ் | 1928 | செயின்ட்மோரிட்ஜ், சுவிட்சர்லாந்து |
| 1932 | ப்ளாசிட்ஏரி, ஐ/அமெரிக்கா | 1936 | கார்மிஷ்ச், ஜெர்மனி |
| 1948 | செயின்ட்மோரிட்ஜ், சுவிட்சர்லாந்து | 1952 | ஆஸ்லோ, நோர்வே |
| 1956 | கார்டினா, இத்தாலி | 1960 | ஸ்குவாவ்வேலி, ஐ/அமெரிக்கா |
| 1964 | இன்ஸ்ப்ரக், ஆஸ்திரியா | 1968 | க்ரெநோபில, பிரான்ஸ் |
| 1972 | சாப்போரோ, ஜப்பான் | 1976 | இன்ஸ்ப்ரக், ஆஸ்திரியா |
| 1980 | ப்ளாசிட்ஏரி, ஐ/அமெரிக்கா | 1984 | சாராஜெவோ, யுகோஸ்லாவியா |
| 1988 | கால்கேரி, கனடா | 1992 | ஆல்பர்ட்வில்லே, பிரான்ஸ் |
| 1994 | லில்லேஹாம்மர், நோர்வே | 1998 | நாகானோ, ஜப்பான் |
| 2002 | சால்ட் லேக் சிட்டி, ஐ/அமெரிக்கா | 2006 | தோரீனோ, இத்தாலி |
| 2010 | வான்கூவர், கனடா | | |
| 2014 | சோச்சி, இருசியா | | |

உலகப்போர் சமயங்களில் மட்டும் (1940,1944) பனி ஒலிம்பிக்ஸ் நடைபெறவில்லை.

செல்வன். ட. திவாகர்
12 வர்த்தகப்பிரிவு (2015)

**இவர்கள் ஏன் இப்படி என்பதை விட இவர்கள் இப்படித்தான் என எண்ணிக் கொள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013 ஆம் ஆண்டின் நிகழ்வுகள்

- ஜனவரி 13 :- பிரதம நீதியரசர் ஸிராணி பண்டாரநாயக்கா பதவி நீக்கம் செய்யப்பட்டார்.
- பெப்ரவரி 04 :- இலங்கையின் 65 சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.
- மார்ச் 18 :- மத்தள விமான நிலையம் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது.
- ஏப்ரல் 06 :- 5 நேசன் றக்பி தொடரில் இலங்கை அணி சம்பியன்.
- மே 13 :- மகாசென் சூறாவளியால் வடக்கு கிழக்கு கரையோர மக்கள் பாதிப்படைந்தனர்.
- ஜீன் 15 :- ஜனாதிபதி இரணைமடு விமான ஓடு தளத்தை திறந்து வைத்தார்.
- ஜீலை 15 :- ஐந்து மாவட்டங்களிலும் கூட்டமைப்பு வேட்பு மனு தாக்கல் செய்தது.
- ஓகஸ்ட் 23 :- ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நவநீதப்பிள்ளை குழு இன்று இலங்கை வந்தது.
- செப்டெம்பர் 14 :- 23வருடங்களின் பின்னர் கிளிநொச்சி வரை யாழ்.தேவி ரயில் சேவை ஆரம்பமானது.
- ஒக்டோபர் 09 :- வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் உத்தியோகபுர்வ பதவியை பொறுப்பேற்றார்
- நவம்பர் 14 :- இளவரசர் சார்ள்ஸ் தனது 65வது பிறந்தநாளை இலங்கையில் கொண்டாடினார்.
- நவம்பர் 15 :- பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாடு நடைப்பெற்றது.
- டிசம்பர் 05 :- தென்ஆபிரிக்காவின் முன்னாள் தலைவர் நெல்சன் மண்டேலா காலமானார்.

க.வைணவி
12 வர்த்தகப்பிரிவு (2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MYSTIC MASTERS SPEAK

01. Even in the common affairs of life,in love friendship and marriage how little security have we trust our happiness in the hands of others

-Hazlitt-

02. He Who reforms himself has done more towards reforming the puplic than a crowd of noisy,stupid impotent patriots.

-Lavater-

03. The best way to come to truth being to examine things as they really are,and not to conclude they are,as we fancy of ourselves,or have been taught by others to imagine.

-Locke-

04. He who would distinguish the true from the false must have a clear idea of what is true and false.

-Spinoza-

05. Tthe heights of ability of a thorough knowledge of the real value of things.

-LaRochefoucauld-

Miss. S. Vasugi
12 Com (2015)

உங்கள் குறைகளை நீங்களே அடையாளம் கண்டு
கொள்வதுதான் வளர்ச்சியின் அடையாளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ சிறந்த மனிதனாய் மாற.........

அதிகம் பேசாதே! அடங்கி இரு!
எந்நேரமும் சிரிக்காதே!
முறையாக கல்வியை கற்றுக் கொள்!
அலைந்து திரியாதே! பண்புடன் நட!
அமைதியாய் இரு! அறிவை பெறு!
மனதை ஒருமைப்படுத்து!
வேதம் கற்றுக்கொள்! தூய்மையாய் இரு!
பெரியாரை மதித்திடு! பெருமை காட்டாதே!
பொய் பேசாதே! திருடி வாழாதே!
அனைவருடனும் சினேகிதன் போல் பழகிடு!
எந்நேரமும் சிந்தனையுடன் செயல்படு!
புறம் பேசாதே! பொறாமை கொள்ளாதே!
யாரிடமும் பலவீனத்தை காட்டாதே!
எப்பொழுதும் எச் சூழ்நிலையிலும் ஏமாறாதே!
உன் புகழை நீயே பாடாதே! தடுமாறாதே!
முயற்ச்சித்துப் பார்! முடியும் எனக் காட்டிடு!
வாழ்த்தைப் பெறு! வரவேற்கப் படுவாய்!
அஞ்சாமல் விடா முயற்சி செய்!
நீயும் சிறந்த மனிதனாய் மாற்றம் பெறுவாய்!

செல்வி. இ.வனஜா
12 கலைப்பிரிவு (2015)

**கற்பது ஒருவனைத் தனக்கு உற்ற துணைவனாக்கும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டைனோசர் இனம் அழிவு : விஞ்ஞானிகள் புதிய விளக்கம்

விண்கல் மோதியதால் டைனோசர் இனம் அழிவு: விஞ்ஞானிகள் புதிய விளக்கம் லண்டன்: பூமியின் மீது ஆறரை கோடி ஆண்டுகளுக்கு முன் விண்கல் மோதியதால் ஏற்பட்ட பேரழிவின் காரணமாக டைனோசர் இனம் முற்றிலும் அழிந்து விட்டதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். பல்வேறு நாடுகளில் ஏற்பட்டு வரும் அகழ்வாராச்சியில் இராச்சத மிருகமான டைனோசரின் எலும்புகளும், முட்டைகளும் கண்டெடுக்கப்பட் டுள்ளன. இந்த டைனோசர் இனம் அழிந்து ஆறரை கோடி ஆண்டுகள் ஆகின்றன என பல்வேறு நாட்டு அறிஞர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். பூமியில் ஏராளமான உயிரினங்கள் உலாவிக்கொண்டிருக்க, இந்த இராச்சத இனம் எப்படி அழிந்தது என்பது புரியாத புதிராக இருந்து வருகிறது. வேட்டையாடப்பட்டு கொள்ளப்பட்டதாக சிலரும், எரிமலை சீற்றத்தில் சிக்கி இந்த இனம் அழிந்துவிட்டதாக சிலரும் கூறி வருகினன்றனர்.

இதுவரை கிடைத்த டைனோசரின் எலும்புகள் உள்ளிட்ட பாகங்களைக் கொண்டு இதன் அழிவு குறித்து உலகம் முழுவதும் உள்ள 41 விஞ்ஞானிகள் கொண்ட குழு, கடந்த 20 ஆண்டுகளாக தீவிர ஆராய்ச்சி மேற்கொண்டது. பல கோடி ஆண்டுகளாக பூமியில் உலாவி வந்த இந்த மிருக இனம், ஆறரை கோடி ஆண்டுகளுக்கு முன் பூமியின் மீது மோதிய விண்கலலால், முற்றிலும் அழிந்து விட்டதாக இந்த விஞ்ஞானிகள் குழு தெரிவித்துள்ளது. மெக்சிகோ நாடு அமைந்துள்ள பகுதியில் 15 கிலோ மீட்டர் சுற்றளவு கொண்ட விண்கல், அணுகுண்டை விட வேகமாக பூமியின் மீது வந்து மோதியுள்ளது. இந்த அதிர்ச்சியால் பூமியில் பூகம்பமும், சுனாமியும், நிலச்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்கல் மோதிய வேகத்தால் அணுகுண்டை விட பலமடங்கு சக்தி வாய்ந்த அதிர்வு ஏற்பட்டது. திடீரென ஏற்பட்ட இந்த மாற்றத்தால் ஓடி ஒளியக்கூட இடம் இல்லாத காரணத்தால் டைனோசர் உள்ளிட்ட ஏராளமான உயிரினங்கள் முற்றிலும் அழிந்து போய் விட்டன என, இந்த விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

செல்வி. ஜெ.சிலோமினா
13 கலைப்பிரிவு (2014)



உயர் பதவி என்பது நிரந்திர சிம்மாசனம் அல்ல அது நமக்கு சரிப்படாவிட்டால் மற்றவருக்கு இடம் தந்து விலகி விட வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுமிக்க கருத்து கலசம்

❖ கடைசி வார்த்தை தன்னுடையதாக இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருவர் மோதிக் கொள்ளும் விஷயம் தான் வாக்குவாதம்.........

❖ முன்னேற வேண்டும் என்று விரும்பினால் யாருடனும் சண்டை போடாதீர்கள். அதில் நேரம் வீணாகிறது. நாயிடம் கடிபடுவதைக் காட்டிலும் நாய்க்கு வழி விடுவதே மேல்.......

❖ மனிதனின் உண்மையான நண்பர்கள் மூன்று பேர்கள் தான் அவர்கள், வயதான மனைவி, வளர்த்த நன்றியுள்ள நாய், தயாராய் உள்ள ரொக்கப்பணம்....

❖ இனாமாக நீ ஒன்றைப் பெற்றுக் கொள்வாயானால் உன் சுதந்திரம் பறிபோய்விடும்...

❖ என்ன ஆச்சரியம் எனக்குத் தெரிந்தது மிகவும் குறைவு என்பதைப் புரிந்து கொள்ள நான் எவ்வளவு விசயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டி இருக்கிறது.....

❖ வாழ்க்கையைப் பற்றி பெரிதும் கவலைப் படாதீர்கள் எப்படியும் நீங்கள் அதிலிருந்து தப்பப் போவதில்லை....

❖ கவலைகள் வந்து கொண்டுதான் இருக்கும், ஆனால் அதற்கு நாற்காலி போட்டு உட்கார வைக்கக் கூடாது...

❖ வெற்றி பெற்றவனிடம், அவன் கூறுவது எல்லாம் உண்மையா என்று யாரும் கேட்க மாட்டார்கள்....

❖ விமர்சனத்தால் காப்பாற்றப்படுவதை விட புகழ்ச்சியினால் அழிந்து போவதையே பெரும்பாலோர் விரும்புகின்றனர்.....

❖ வாதாட பலருக்குத் தெரியும், உரையாட ஒரு சிலருக்கே தெரியும்.......

❖ அதிர்ஷ்டத்தின் வலது கை உழைப்பு, இடது கை சிக்கனம்....

❖ எப்படி என்று தெரிந்திருப்பவனுக்கு எப்போதும் வேலை கிடைத்துவிடும்....

❖ ஆனால் ஏன்? என்று தெரிந்திருப்பவன் தான் அவனுக்கு முதலாளியாக இருப்பான்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ இளமை ஒரு தவறு, வாலிபம் ஒரு போராட்டம், முதுமை ஒரு வருத்தம்…
- ❖ புகழ் என்பது நம் செயலின் எதிரொலி…
- ❖ கவலைப்பட நேரம் இன்றி உழை, கண்ணீர் விட நேரமின்றி உறங்கு, நீயே அதிர்ஷ்டக்காரன்…
- ❖ ஒரு புத்திசாலியால் சாதிக்க முடியாததை, ஒரு பொறுமைசாலி சாதித்து விடுவான்…..
- ❖ எப்படி வேண்டுமானாலும் சமையல் செய்யுங்கள், ஆனால் அன்புடன் பரிமாறுங்கள்…
- ❖ பெரிய பாறை மீது யாரும் மோதிக் கொள்வதில்லை, சிறிய கற்கள் தான் இடற வைக்கின்றது….
- ❖ வெற்றியில் நிதானம் போகிறது, அதை தொடர்ந்து வெற்றியும் போகிறது….
- ❖ நம் வாழ்நாள் மிகவும் குறைவு என்று வருந்துகிறோம், ஆனால் நம் வாழ்விற்கு முடிவே இல்லாதது போலக் காரியங்களை செய்து கொண்டே இருக்கிறோம்…
- ❖ மகிழ்ச்சி என்பது நம் வீட்டில் விளைவது, மற்றவர் தோட்டத்தில் அதை தேட வேண்டியதில்லை…
- ❖ வாழ வேண்டும் என்று நினைக்கிறவனுக்கு எந்த விமர்சனத்தையும் தூக்கி எறியும் தைரியம் வர வேண்டும்…
- ❖ நீ தொலைத்தது நாட்களைத் தான், நம்பிக்கையை அல்ல…
- ❖ கேட்டால் சிரிப்பு வர வேண்டும், சிரித்தால் அழுகை வர வேண்டும், அதுதான் நல்ல நகைச்சுவை…
- ❖ இருக்கிற செல்வம் போதுமென்று திருப்தி அடைவது சரிதான்,ஆனால் இருக்கிற திறமை போதுமென்று நினைப்பது சரியல்ல…
- ❖ எப்போதும் ஒரே நிலையில் இருப்பதற்குப் பெயர்தான் நிம்மதி….

செல்வி. ர.தினுசியா
13 கலைப்பிரிவு (2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்பனாவும் நாசாவும்

இந்தியாவில் பிறந்து அமெரிக்க பிரஜையானவர் கல்பனா சாவ்லா (Kalpana Chawla, ஜூலை 1, 1961 - பெப்ரவரி 1, 2003). கொலம்பியா விண்வெளி கலத்தில் ஐந்து விண்வெளி வீரர்களுடன் பயணம் செய்தமுதல் பெண்மணி எனும் பெருமைக்கு உரியவர். STS-107 என்ற கொலம்பியா விண்ணோடத்தில் பறந்து பூமிக்குத் திரும்பிக்கொண்டிருந்த போது, விண்கலம் வெடித்துச் சிதறியது. அதில் கல்பனா சாவ்லா உயிர் இழந்தார். கல்பனா சாவ்லாவை கௌரவிக்கும் பொருட்டு நியூயார்க் நகரிலுள்ள ஒருசாலைக்கு அவருடைய பெயர் வைக்கப்பட்டுள்ளது.

**கல்வி**

கல்பனா சாவ்லா தனது கல்வியை கர்னலில் உள்ள தாகூர் அரசுப்பள்ளியில் தொடங்கினார். அவர் 1982 ஆம் ஆண்டு, சண்டிகரில் உள்ள பஞ்சாப் பொறியியல் கல்லூரியில் விமான ஊர்தியியலில் தனது இளங்கலைப் பட்டத்தைப் பெற்றார். அதேவருடம் அவர் அமெரிக்கா சென்றார். அர்லிங்க்டோனில் உள்ள டெக்சாஸ் பல்கலைக்கழகத்திலிருந்து விண்வெளி பொறியியலில் முதுகலைப் பட்டத்தை 1984 ஆம் ஆண்டு பெற்றார். அதன் பின்னர் பௌல்தேரில் உள்ள கோலோரடோ பல்கலைக்கழகத்தில் 1986 இல் இரண்டாம் முதுகலைப்பட்டத்துடன், விண்வெளி பொறியியலில் முனைவர் பட்டத்தை 1988 ஆம் ஆண்டு பெற்றார்.

பின்னர் அதே வருடம் நாசா அமெஸ் ஆராய்ச்சிகூடத்தில் ஒசெர்செட் மேதொட்ஸ் இன்க் இல் துணைத் தலைவராகப் பொறுப்பேற்ற கல்பனா V/STOL இல் CFD ஆராய்ச்சி செய்தார். விமானம் மற்றும் கிளைடேர்களை ஓட்டக்கற்றுக் கொடுக்க சாவ்லா தகுதிச் சான்றிதழ் பெற்றார். ஒன்று மற்றும் பல பொறிகள் பொருத்திய விமானங்கள், கடல் விமானங்கள் மற்றும் கிளைடேர்களையும் ஓட்ட அனுமதி பெற்று இருந்தார். FCC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KD5ESI என்ற அடையாளத்துடன் தரும் டெக்னிசியன் பிரிவு அமெச்சூர்ரேடியோ அனுமதியும் பெற்றிருந்தார்.

கல்பனா 1983 ஆம் ஆண்டு ஜீன் பிஎர்ரே ஹாரிசன் என்ற விமானப்பயிற்சி ஆசிரியரை மணம் முடித்தார். அதன் மூலம் 1990 ஆம் ஆண்டில் அமெரிக்கரானார். ஹாரிசன் ஆகாய விமான ஓட்டும் கலையைப்பற்றி எழுதும் ஒருவல்லுனரும் ஆவார்.

**மாதிரி விண்கலத்தில் கல்பனா**

கல்பனா மார்ச் 1995 இல், நாசா விண்வெளி வீரர் பயிற்சி குழுவில் சேர்ந்தார். 1996 ஆம் ஆண்டு அவரது முதல் பயணத்திற்கு தேர்வு செய்யப்பட்டார். கொலம்பிய விண்வெளி ஊர்தியான STS-87 இல் பயணித்த ஆறு வீரர்களில் ஒருவரான கல்பனாவின் இந்த முதல் பயணத்திற்கு அவர் நவம்பர் மாதம் 19 ஆம் நாள், 1997 ஆம் ஆண்டு முதல் ஆயத்தமானார். 1984 இல்சோவியத் விண்கலத்தில் பயணித்த ராகேஷ் ஷர்மாவை அடுத்து விண்வெளி சென்ற முதல் இந்திய பெண் வீராங்கனை என்ற அழியா பெருமையை இவர் பெற்றார். கல்பனாவின் முதல் பயணத்திலேயே அவர் 360 மணி நேரம் விண்வெளியில் இருந்து, 10.4 மில்லியன் மைல்கள் கடந்து பூமியைச் சுற்றி சிதறி இருக்கும் 252 கோளப்பாதைகளை வலம் வந்துள்ளார்.

STS-87 இன் போது வின்ஸ்டன் ஸ்காட் மற்றும் தகாவோ டோய் விண்வெளியில் நடந்து ஸ்பார்டன் என்று செயல் குறைப்பாடிலிருந்த செயற்கைக் கோளைக் கட்டுப்பாட்டில் கொண்டுவரக் காரணமாக இருந்தார். ஐந்து மாத சோதனைக்கு பிறகு, மென்பொருள்களிலும், பறக்கும் குழுவின் செயல் முறைகள் மற்றும் தரைக் கட்டுப்பாடுகளில் உள்ள பிழைகளை நாசா கண்டறிந்தது. STS-87க்கு பின்னர் கல்பனா தொழில்நுட்ப வல்லுனராக விண்வெளி அலுவலகத்தில் செயலாற்றினார். அவரது செயலைப்பாராட்டி அவரது சகவல்லுனர்களே ஒரு விருதும் வழங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000 ஆம் ஆண்டில், கல்பனா STS-107 இல் பயணிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த முயற்சி பலதரப்பட்ட தொழில்நுட்ப கோளாறுகளால் காலம் கடத்தப்பட்டது. 2002 ஆம் ஆண்டு அவர்கள் பயணிக்க இருந்த விண்கலப் பொறியில் இருந்த ப்லோ லயினர்களில் பிளவுகள் ஏற்பட்டிருந்ததையும் கண்டறிந்தனர். ஜனவரி 16, 2003 இல் சாவ்லா மீண்டும் கொலம்பியாவிலிருந்து கொலம்பிய விண்கல விபரீதம் STS-107 இல விண்வெளி திரும்பினார். இந்தப் பயணத்தில் சாவ்லாவின் பொறுப்புகள் SPACEHAB/BALLE-BALLE/FREESTAR மைகிரோகிராவிட்டி சோதனைகளாக இருந்தன. இதற்காக அவரது குழுவினர் பூமியையும் விண்வெளியையும் கண்காணித்து 80 பரிசோதனைகள் மேற்கொண்டனர்.

இதில் விண்வெளி வீரர்களின் உடல் நிலைப்பற்றியும் அவர்களின் பாதுகாப்பு பற்றியும், விண்வெளி தொழில்நுட்ப மேம்பட்டு வளரவும் பல சோதனைகள் புரிந்தனர்.

செல்வி. தி.சுபி
13 கலைப்பிரிவு (2014)



கை என்பது குறைவான தகவல்களை வைத்துக் கொண்டு
சரியான முடிவுக்கு வரும் உரு கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகிரியா

சிகிரியாக் குன்று (Sigiriya) இலங்கையின் இணையற்ற கலைப்பாரம்பரியத்தின் சின்னமாகக் கருதப்படுகிறது. இது மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள நகரத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது. 1144 - அடி உயரமான இக்குன்றினுள் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சித்திரங்கள் பல உள்ளன. இவை 6-ம்நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே இக்கோட்டையை முதலாம் காசியப்பன் (கி.பி. 477-495) அமைத்தான். கோட்டையை சுற்றி அகழியும் கட்டப்பட்டுள்ளது. சிகிரியா குன்றானது ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தால் (UNESCO) பாதுகாக்கபட வேண்டிய உலக பாரம்பரியக்களமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காசியப்பன் தாதுசேன மன்னனின் 2 ஆவது மனைவிக்கு பிறந்த மகனாவான். தாதுசேனனுக்குப் பின் பட்டத்து இராணிக்குப் பிறந்த முகலனுக்கே அரச உரிமையுண்டு. எனினும் காசியப்பன் தந்தையைக்கொன்று, சிகிரியாவில் கோட்டை அமைத்து அரசாட்சி எய்தினான்.

இக்குகையினுள் ஃபிராஸ்கோ (FRASCO) முறையில் இயற்கை வர்ணங்கள் கொண்டு வரையப்பட்ட பல சித்திரங்கள் காணப்படுகின்றன. இவைகளில் பல இன்னும் அழியாமல் அழகாகக் காட்சி தருகின்றது. இந்த ஓவியங்களில் காணப்படும் பெண்கள் சிலரால் தேவதைகள் (அப்சரஸ்கள்) எனவும் சிலரால் காசியப்பனின் மனைவிகள் எனவும் கூறப்படுகின்றனர். இவர்களில் சிலர் கையில் தட்டை ஏந்தியவாறும், சிலர் மலர்க்கொத்தை ஏந்தியவாறும் சிலர்மேலாடை இன்றியும், சிலர் மேலாடையுடனும், தனித்தும், கூட்டமாகவும் வரையப்பட்டுள்ள.

செல்வி. அ. பிரன்சினா
13 கலைப்பிரிவு (2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக்கு விருந்து

❖ 1 கிலோ கிரேம் தேனில் 65 முட்டைகளில் உள்ள சத்து உள்ளது.

❖ உலகில் அதிகமாக மக்களை வாட்டும் நோய் பல் வலி ஆகும்.

❖ குதிரையின் கர்ப்பகாலம் 11 மாதம்.

❖ மனித உடலில் உள்ள உணவுக் குழாயின் நீளம் 30 அடி ஆகும்.

❖ முதலை 7 மீற்றர் வரை வளரும்.

❖ சிலந்தி 1 மணி நேரத்திற்கு 112 மீற்றர் வரை நூலை உருவாக்கும்.

❖ ஜப்பான் தட்டச்சு இயந்திரத்தில் 2863 எழுத்துக்கள் உள்ளன.

செல்வி. த.மதுஷா
12 கலைப்பிரிவு (2015)



எந்த விவேகமும் மௌனத்திற்கு ஈடல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகப்பெரிய சூரியச் சூறாவளி

100 மில்லியன் ஹைட்ரஜன் குண்டுகளின் சக்தி கொண்ட மிகப்பெரிய சூரியப்புயல் ஒன்று ஏற்படும் இதனால் பூமியில் பலத்த சேதங்கள் ஏற்படும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். நாடுகளின் மின்சார விநியோக அமைப்புகளும் தகவல் தொடர்பு அமைப்புகளும் பலத்த சேதமடையும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

விமானப் போக்குவரத்து, மின்னனுச்சாதன அமைப்புக்கள், கப்பல் போக்குவரத்துக்கு உதவும் உபகரணங்கள் முக்கியமாக செயற்கைக் கோள்கள் வேலை செய்யாது.

நாசாவின் சூரியப் பௌதீகப் பிரிவு விஞ்ஞான டாக்டர் பிஷர் இது பற்றிக் கூறுகையில் 100 ஆண்டுகளில் அசாதாரண சக்தி கொண்ட இந்த சூரியப்புயல் முதன் முதலாகத் தாக்கவுள்ளது. இதனால் பெரிய அளவுக்கு மின்விநியோகத் தடைகளும் தகவல் தொடர்பு சிக்னல்கள் இழக்கப்படும் என்று எச்சரித்துள்ளார்.

சூரியப்புயல் தாக்குகையில் சூரியனின் வெப்ப அளவு 10000 டிகிரி பாரன்ஹீட்டையும் கடந்து விடும் இந்த சூப்பர் சூரிய சூறாவளி இடி இடிப்பது போன்று நிகழும் புவியில் காந்தப் புலன்களை நம்பி இயங்கும் நமது தகவல் தொழில்நுட்ப உலகம் பெரிதும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

இந்த சூரியப்புயலால் ஏற்படும் சூரிய எரிதழல்கள் பூமியின் காந்தபுலத்தை பாதிக்கும். ஆனால் இது மிகமிக வேகமாக நடக்கும். ஒரு இடி இடிப்பது போன்ற நேரத்தில் அனைத்தும் நடந்து முடிந்து விடும் என்கின்றார் நாசா விஞ்ஞானி பிஷர். இதனால் ஏற்படும் மின்விநியோக அமைப்புக்கள் சேத உள்ளிட்ட பிரதேசங்களை சீர் செய்ய மிகப் பெரிய அளவில் பணம் செலவழியும் என்பதோடு நீண்ட காலம் பிடிக்கும் என்பதும் உண்மை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிய சுழச்சியில் 24ம் கட்டத்தை அது எட்டுவதால் இந்த நிகழ்வு தவிக்க முடியாது என்கின்றனர் விஞ்ஞானிகள். இந்த கண்டு பிடிப்புக்கள் ஆஸ்டேலியன் சயன்ஸ் என்ற பத்திரிக்கையில் வெளியாகியுள்ளது. மேலும்

- ❖ பூமியின் மேற்புற வளி மண்டபம் சுருங்குகின்றது.
- ❖ சந்திரன் சுருங்குகின்றது - அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு.
- ❖ புதிய பாறை பிளவே ஹைட்டி பூகம்பத்திற்கு காரணம்.
- ❖ சுற்றுசூழல் பாதுகாப்பு.
- ❖ வானிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தவில்லையெனில் பேரழிவு- பிரிட்டன் பிரதமர் எச்சரிக்கை.
- ❖ ஆண்டு தோறும் 1,500 சதுர கி.மீ இழந்து வரும் அமேசன் காடுகள்

செல்வி. அகல்யா
13 கலைப்பிரிவு (2014)



**வாழ்வதும் வாழ்விடுவதும் நமது வாழ்க்கைத் தத்துவங்களாக ஆக்கிக் கொள்வோம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்கல்வி நிறுவனங்களில் இடம்பெறும் பகிடிவதை நன்மையா? தீமையா?

திருமதி: T.ஜோன்பற்றிக்
க.பொ.த (உ/த) பகுதித்தலைவர்

பகிடிவதையின் ஆரம்பம் கிறிஸ்தவ வருடம் 7ம், 8ஆம் காலம் வரையிலிருந்து தோன்றியது. புதிதாக அணியில் இணைத்துக் கொள்வோரை பகிடிவதை செய்வதன் மூலமும் கேலிப்பேச்சுக்கும் அவமானத்திற்கும் ஆளாக்குவதன் மூலமும் **"அணியின் அங்கத்தவர்களிடையே ஒற்றுமையையும் அணியின் ஆற்றலையும் தக்கவைத்துக்** கொள்ளும் நோக்கில் **பண்டையக் கிரேக்கச் சமூகம்** பகிடிவதையை பயன்படுத்தியதாக வரலாறு கூறுகின்றது."

காலம் கடந்துச் செல்லச்செல்ல பல மாற்றங்களுக்குட்பட்டு பிற்காலத்தில் இராணுவப் பயிற்சிக் குழுக்களால் பின்பற்றப்பட்டதை யடுத்து இப் பகிடிவதை கல்வி நிறுவனங்களுக்கும் பரவியது. முதலாம் உலக யுத்தத்தின் பின் பகிடிவதை பெரும் மாற்றத்திற்குட்பட்டு பயங்கரமான சில அம்சங்கள் இணைந்து கொண்டன. யுத்தத்தை முடித்துக் கொண்டு திரும்பிய சிப்பாய்கள் மீண்டும் கல்விச்சாலைக்கு கல்வி கற்கச் சென்றதால் பாடசாலைகளிலும் பகிடிவதை தொற்றிக் கொண்டது.

20ம் நூற்றாண்டையெட்டிய காலப்பகுதியில் மேற்கத்தேய நாடுகளில் பகிடிவதை அதன் வன்முறைத் தன்மையின் உச்சகட்டத்தையெட்டியது. ஆங்கிலேயரின் வருகையாலும் இந்தியா இலங்கையிலும் பகிடிவதை கலாச்சாரம் காலூன்றிக் கொண்டது. பல்லின மக்கள் கலாச்சாரத்தை கொண்ட நாடு என்ற வகையில் இலங்கையில் மேற்கத்தேய கலாச்சார அங்கமாகிய பகிடிவதை பயங்கர பின்விளைவுகளை ஏற்படுத்த காரணமாக அமைந்துள்ளது. பண்டைய காலந்தொட்டு இலங்கையர் அந்நியர்களை மனமுவந்து உபசரிப்பதில் பிரசித்து பெற்று விளங்குகின்றனர்" ஆனால் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் வேரூன்றியிருக்கும் பகிடிவதை புதியவரை அல்லது அந்நியரை மனமுவந்து வரவேற்கும் மனித நேயத்தன்மையைப் பெரிதும் பாதித்துள்ளது.

**பகிடிவதையின் செயற்பாடுகள் பல்கலைகழகத்தினுள்ளோ அல்லது வெளியிலோ செயற்படுத்தப்படுகின்றது**

1. புதிய மாணவர்களை இரக்கமற்ற வகையில் வழி நடத்துதல்
2. அவர்களை கேலிக்கு ஆளாக்குதல்
3. உடல் அல்லது உள ரீதியான தாக்கங்களை ஏற்படுத்துதல்
4. மாணவர்களது தினசரி கல்வி கற்றலுக்குத் தடையாக அமைத்தல் அல்லது கல்வியை சீர்குலைக்கும் தன்மையில் ஈடுபடல்
5. புதிய மாணவர்கள் மீது பலவந்தமாக பணச்சுமையினை ஏற்படுத்துதல்
6. பாலியல் துஸ்பிரயோகம், ஓரினச்செயற்கை செயல்கள், நிர்வாணப்படுத்தல்
7. மின்னஞ்சல்கள், தபால், தொலைபேசி மூலம் பகிரங்கமாக மானபங்கப்படுத்தல்.

**சிறிய விதமான பகிடிவதைகள் (நன்மைகள்)**

1. புதிய மாணவர்களின் சுயநலப்போக்கை தகர்த்தல்
2. பிறர் நலம் பேணவைத்தல்
3. புதிய மாணவர்களுக்கு விநோதமாகவும் பயனை பெற்றுக் கொடுக்கும் வாய்ப்பும் உள்ளது.
4. மூத்த மாணவர்களுக்கும் புதிய மாணவர்களுக்கும் நீடித்து நிலைக்கக் கூடிய தொடர்பு ஏற்றடும்
5. புதிய மாணவர்கள் புத்தகத்தில் மாத்திரம் கவனம் செலுத்துபவராக மாத்திரம் இல்லாமல் வெளி உலகத்துடன் தொடர்புகளை பேணி வரவும் பழகுகின்றன.
6. பகிடிவதை விடுதி வாழ்கைக்கு புதிய மாணவர்களை பழக்க உதவுகின்றன.
7. புதிய மாணவர்கள் பகிடிவதைக்கு உட்படுவதால் கூச்சம் பயம் என்பன விடுபடக் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. வாழ்கையை உரிய முறையில் ரசித்து வாழவும் அதை விடாது கடைபிடிக்கவும் விகாட்டுகிறது.
9. பாலியல் கல்வியை கற்கவும் வாய்ப்பு கிடைகின்றது.
10. சிரேஷ்ட மாணவர்களின் உதவிகளை பெற்றுக் கொள்ள வாய்ப்பு கிடைக்கின்றது.

பகிடிவதையின் தீமைகள்.

01. உடல் ரீதியான உபாதைகளை ஏற்படுத்துதல்
02. பாலியல் வல்லுறவுகட்குட்படுத்தல்
03. மன உளைச்சல் ஏற்படல்
04. மனித உரிமை மீறல்
05. பலவந்தமாக போதைவஸ்து மது மற்றும் புகைபிடித்தல் போன்றவற்றில் ஈடுபடச் செய்தல்
06. விபத்துக்களும் துன்பங்களும்
07. தனித்துவக் கோளாறு தோன்றல்
08. உடல் ரீதியான பகிடிவதையின் போது திடீர் மரணம் சம்பவித்தல்
09. தற்கொலையில் ஈடுபடல்
10. கல்வியை விடடு விலக நேரிடுதல்

பகிடிவதையை தடுப்பதற்கான பல்கலைகழக சட்டங்கள் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பராளுமன்றத்தால் செயற்படுத்தப்படுகின்றது. இச்சட்டத்தால் 1998 ஆம் ஆண்டு 20ஆம் இலக்கம் கொண்ட கல்வி நிறுவனங்களில் பகிடிவதை மற்றும் வேறு விதங்களிலான கொடுஞ்செயல்களை தடைசெய்யும் சட்டம் என அழைக்கப்படுகின்றது. பகிடிவதை பற்றிய தகவல்களைத் தெரிவிக்கக் கூடிய தொலைபேசி எண் உடன் அழைக்கக்கூடிய எண் 1918 உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் பகிடிவதை பற்றிய அறிவினைப் பெறவும் அதனை தடுக்கத் தேவையான நடவடிக்கை எடுப்பவர்களுக்கும் பிறரின் கருத்தை மதிக்கும் ஒழுக்கம்மிக்க மாணவச் சமூகத்திற்கும் இத்தகவல் வழங்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை

புதியதோர் உலகம் செய்வோம்
புன்னகை தினமும் மலரச்செய்வோம்
வறுமையை போக்கச்செய்வோம்
வாழ்க்கையை வெல்லச்செய்வோம்
சிறுமைவாழ் நீங்கச்செய்வோம்
சிந்தனை தினம் வளரச்செய்வோம்
விண்வெளி பயணம் செய்வோம்
வீரனாய் என்றும் வாழச்செய்வோம்
ஒருவனின் வழியில் செல்வோம்
ஒன்றுபட்டு நன்றுசெய்வோம்
அன்னையை மதித்தே செல்வோம்
அன்னை மண்காத்தே வெல்வோம்
புதியதோர் உலகம் செய்வோம்
புத்தியீவியாய் என்றும் வாழ்வோம்

செல்வன். த.மோகன்ராஜ்
12 கலைப்பிரிவு (2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மூடநம்பிக்கைக்கு ஓர் முற்றுப்புள்ளி

திரு. செ.விமலானந்தம், B.A(Hons) PGDP
(புவியியல் பாடஆசிரியர்)

*வானத்திலிருந்து மீன்கள் வீழ்கின்றனவா....* இல்லை அது ஓர் மூட நம்பிக்கை ஆகும். பலமான கோடை மழைக் காலங்களில் நன்னிர் மீன்கள் மழை நீருடன் நிலமேற்பரப்புக்களில் அங்காங்கே துடித்துக் கொண்டுகிடக்கின்றன. இதனைக் கண்டு படித்தவர்கள் மட்டுமன்றி பாமரர்களும் மழையுடன் வானத்திலிருந்து மீன்கள் வீழ்ந்துள்ளதாக நம்புகின்றனர். அவ்வாறு விழமுடியாது அதற்கான வாயப்புக்கள் சற்றேனும் கிடையாது. அப்படியாயின் அந்த மீன்கள் எவ்வாறு வந்தன என நீங்கள் கேள்வி எழுப்பலாம். அதற்கு நான் உங்களிடம் சில கேள்விகளை கேட்க முற்பட்டால்.

1. நன்னீர் மீன்கள் மட்டும்தானா விழும்? கடல் மீன்கள் விழ வில்லையே.
2. நிலத்திலும் குட்டைகள் போன்ற மழைநீர் சேருமிடங்களிலும் விழும் மீன்கள். ஏன் கட்டுக்கிணறுகளில் விழுவதில்லை?
3. நீர் வழிந்தோடும் பெரியமழையின் போது விழும் மீன்கள் ஏன் சிறுமழையின் போது விழுவதில்லை?
4. கோடை மழையில் வீழும் மீன்கள் ஏன் மாரிமழையில் விழுவதில்லை?
5. வானத்தில் இருந்து நிலமேற்பரப்பில் வந்து விழும் மின்கள் இறந்து விடாது ஒரு சிறுகாயங்களும் இன்றி எவ்வாறு உயிருடன் இருக்கின்றன.

என பல கேள்விகளை எழுப்பும் போது சரியான விடை மழையுடன் வானத்திலிருந்து மீன்கள் விழுவதில்லை. அப்படியாயின் எங்கிருந்து மீன்கள் வருகின்றன என பார்ப்போமானால் கோடைகால வரட்சியின் போது நன்நீர் நிலைகளின் நீர்மட்டம் குறைந்து கொண்டு போகும் போது அதில் உள்ள மீன்களின் வாழிடம் நீர்ப்பரப்பு குறைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதால் குறுகிய நீர்ப்பரப்பில் மீன்கள் உணவின்றி இடவசதியின்றி இறக்கும் அபாயநிலைக்கு சென்று கொண்டிருக்கும். அப்படியான காலத்தில் முதல் கோடை மழை பெருமழையாக பொழிந்து நிலப்பரப்பை கழுவி அடித்துக் கொண்டு நீர் அந்த மீன் வாழிடங்களை அடையும் போது மீன்கள் புதுநீர், கழிவுப் பொருட்களால் ஆன உணவுகள் என்பவற்றை உண்டு மேலும் நீரவரும் திசை நோக்கி மீன்கள் ஓடும்.

இவ்வாறு ஓடி மேட்டு நிலங்களை அடைந்ததும் மழை விட்டதாலும் நீர் குறைவடைந்ததாலும் நீரற்ற நிலத்தில் மீன்கள் துடித்துக் கொண்டு கிடக்கும். இவ்வாறு துடித்துக் கொண்டு கிடக்கும் மீன்களைக் கண்டவர்கள் மழையுடன் வானத்தில் இருந்து மீன்கள் வீழ்ந்ததாக நம்புகின்றனர். எனவே ஒரு போதும் வானத்தில் இருந்து வீழ்வதில்லை. மீன்கள் மழையுடன் வானத்திலிருந்து வீழ்வதென்பது தவறான எண்ணப்பாங்காகும்.



**கஷ்டமாக இருப்பதால் எதையும் சாத்தியமானதல்ல என்று எண்ணிவிடக் கூடாது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகத்தின் வெற்றி புத்துருவாக்கத்திறனில்

திருமதி. ஜெ. சிறீதரன்
(உயர்தரப் பிரிவு ஆசிரியர்)

நாம் வாழும் இவ்வுலகம் கண்டம், நாடு, நகரம், கிராமம் எனப் பிரிக்கப்பட்டிருந்தாலும், ஏதோ ஒரு வகையில் ஒன்றாய் பிணைக்கப்பட்டதாகவே உள்ளது. இந்தப்பிணைப்பு முக்கியமாக வணிகத்தினால் ஏற்பட்டது என்பது வெளிப்படை. இதனால் மனித உலகம் ''வணிக உலகம்'' எனவும் அழைக்கப்படலாம். இவ்வணிக உலகம் தகவல் யுகத்திற்குரியதாகும் என்பது இங்கு குறிப்பிடுதல் அவசியம்.

மனித குலத்தின் பரம்பல், வரலாற்று ஆசிரியர்களால் பல்வேறு யுகங்களாக வகுத்தாராயப்பட்டுள்ளது. அவை விவசாய யுகம், கைத்தொழில் யுகம் மற்றும் தற்பொழுது நாம் வாழும் தகவல் யுகம் என்பனவாகும். இந்த யுகங்களின் வகைப்படுத்தல், அடிப்படையாக வணிகத்தின் பின்னணியிலும் விசேட முக்கியத்துவம் பெறுகிறது. வணிகப் பின்னணியிலான இவ்வளர்ச்சிக் காலக்கட்டங்களில் மனிதனின் அடிப்படைச் செயற்பாடுகளே இவற்றின் ஆதரமாகின்றன. அதாவது, மனிதன் தான் உயிர் வாழ்வதற்காக மேற்கொண்ட வாழ்க்கை முறை செயற்பாடுகள் யுகங்களை வரையறை செய்கின்றன. எவ்வாறெனில், வேடர்களாக வேட்டையாடி வாழ்ந்த மனிதன் விவசாய யுகத்திற்குள் நுழைகின்றான். தொடர்ந்து கைத்தொழில் யுகத்திற்குள்ளும் அதனைத் தொடர்ந்து தகவல் யுகத்திற்கும் படிப்படியாக முன்னேறுகின்றான். மனிதனின் யுகரீதியான அனைத்து வளர்ச்சிச் செயற்பாடுகளுக்கும் அடிப்படையாக அமைந்தது அவனது ''தேவைகளை நிறைவேற்றுதல்'' என்ற நிலைமையாகும். இதுவே, வணிகத்தின் அடிப்படையாகக் குறிப்பிடப்படுகின்றது. இதனடிப்படையில் வணிகம் பற்றி சிறிது நோக்குவோமாயின், தற்கால வணிகம் என்பது எளிமையாக ''வாடிக்கையாளரின் தேவை, விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்குரிய எந்த ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார செயற்பாடும்" என வரையறை செய்யலாம். இங்கு ஆற்றப்படுகின்ற பொருளாதாரக் கருமமானது இலாப நோக்குடன் அல்லது இலாப நோக்கின்றி சேவை நோக்குடன் நடாத்தப்படலாம்.

"எது எவ்வாறாயினும் அவற்றின் அடிப்படை நோக்கம் தேவைகளைப் பூர்த்தி செய்தல் என்பதாகும். இத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் பொருட்கள் சேவைகளைக் கொண்டே, எந்த ஒரு நாட்டிலும் மக்களின் வாழ்க்கைத்தரம் அளவீடு செய்யப்படுகிறது. தனி நுகர்வு, கூட்டு நுகர்வு எதுவாயினும் வணிகங்களினால் வழங்கப்படும் பொருட்கள் சேவைகள் ஊடாகவே வாழ்க்கையின் பண்பும் தரமும் உயர்த்தப்படுகின்றது. உதாரணமாக சுவிற்சர்லாந்து (Switzeland) சூறிச் (Zurich) போன்ற நாடுகளில் வாழ்க்கைப் பண்புத்தரம் உலகிலேயே உயர் மட்டத்தில் காணப்படுகிறது.

இவ்வாறு கற்கால மனித வாழ்க்கை தரத்திலிருந்து இன்றைய இவ்வுயர் வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்தித் தந்தது பொருட்களும் சேவைகளும் அவற்றின் உயர்தரமும் ஆகும்.

எனவே, இவ்வுயர்தரத்திலான பொருள் சேவைகளை உற்பத்தி செய்ய வேண்டியது அவசியமானதாகிறது. நாளுக்கு நாள் மாற்றமுறும் உலக நடைமுறைக்கு ஏற்ற வகையில் புத்துருவாக்கத்துடன் வணிகச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது வணிகங்களின் கட்டாயத் தேவையாகிறது.

வணிகங்கள் தாம் வணிகங்களாக நிலைத்திருப்பதற்கு பயன்படுத்தும் உலக நுட்பமே புத்துருவாக்கத் திறனாகும். அது பற்றியும் சிறிது ஆராய்வோம்.

புத்தாக்கத்திறன் என்பது உளச்செயல் உளவியலின் (Cognitive Psychology) முக்கிய அம்சமாக விளங்குகின்றது. இத்துறையை பிரபல்யபடுத்திய பெருமை மோல்ரா தீவைச் (Malta) சார்ந்த எட்வேட் டீ போனோவையே (Edward debono) சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாக்கத்திறன் பற்றிய வரைவிலக்கணங்கள் பல முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ''செயல்களை அல்லது எண்ணங்களை புதிய முறையில் இணைத்தலே புத்தாக்கத் திறனாகும்'' என்பது பின்வருவோரின் வரைவிலக்கணமாகும்.

(Glover, Ronnig Reynoids - 1989, Smith, Ward, Finka, Robert S.Feldman P233-1995)

பல்வே அறிஞர்களின் வரைவிலக்கணங்களையும் தொகுத்து பொதுவாக நாம் ''புத்தாக்கத்திறன் என்பது, சுய அறிவினால் கடந்தகால அனுபவங்கள் செயல்கள் அல்லது எண்ணங்கள் என்பவற்றை புதிய முறையில் இணைத்து புதிதாக அல்லது வித்தியாசமாக ஒன்றைக் கண்டறிதல் அல்லது ஆக்கல்'' எனக் குறிப்பிடலாம்.

இதனையே, வள்ளுவப் பெருந்தகை தனது நூலில் இறைமாட்சி அதிகாரத்தில் ''இயற்றலும் ஈட்டலும் காத்தலும்....'' எனும் குறள் வரிகளில் வெளிப்படுத்தியுள்ளார். அதாவது ''இயற்றல்'' என்பது தனக்குப் பொருள்கள் வரும் வழிகள் பற்றி புதிதாகச் சிந்தித்தல் ஆகும். எமது இன்றைய வணிக வார்த்தையினூடாக குறிப்பிடுவோமாயின் ''புதிய வணிகச் சந்தர்ப்பங்களைத் தோற்றிவித்தல்'' என்பதேயாகும். அதாவது புத்தாக்கத்திறனூடாக புதிய வணிக வழிகளை கண்டறிதல் என்பதாகும்.

இன்றைய எமது நவீன வணிக உலகில் மிகவும் வலியுறுத்தப்படும் ஒரு துறை சார்விடயமாக வளர்ச்சியடைந்து வரும் ''முயற்சியாண்மை - Entre Preneurship'' எண்ணக்கருவும் புத்தாக்கத்திறன் எனும் அடிப்படையிலிருந்து உருவானதாகும்.

உலகில் ''மாற்றம்'' என்ற ஒன்று மட்டுமே மாறாதது என்றால் அது எவ்வாறு நிகழ்கின்றது என்று நாம் சிந்திப்போமானால், அது ''புத்தாக்கத்திறன்'' அடிப்படையில் என்பது எமக்குத் தெளிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை பின்வரும் விடயங்களுக் கூடாக நாம் உணர்ந்து கொள்ளலாம்.

முதலாவதாக, ஆரம்பகால விவசாய யுகத்திற்குரிய மனிதனுக்கும் தற்கால தகவல் யுக மனிதனுக்கும் இடையில் காணப்படும் வாழ்வியல் வேறுபாடுகளை நோக்கலாம். மிகவும் அடிப்படை தேவைக்கான உணவு, உடை ஆகியவற்றைப் பூர்த்தி செய்வதற்கான, அக்கால, இக்கால வழிமுறைகள் சிறந்த எடுத்துக்காட்டாக அமையும். இவ்வேறுபட்ட வழிமுறைகளும் வசதிகளும் உருவானது உற்பத்தியாளர்கள், வடிவமைப்பாளர்கள் ஆகியோரின் புத்துருவாக்கச் சிந்தனைகளிலிருந்தாகும் என்பது வெளிப்படை. இச் சிந்தனை வளர்ச்சியே எமது வசதியான வாழ்வின் வடிவங்களாகும்.

வணிகத்தின் ஒவ்வொரு பகுதியினதும் அதாவது உற்பத்தி, வியாபாரம், துணைச் சேவைகள் மற்றும் அதனோடு இணைந்த வணிகம் சார் செயற்பாடுகளில் அத்துறை சார்ந்த புத்துருவாக்கச் சிந்தனைத் திறன் விருத்தியூடான செயல் வடிவங்கள் தான், இன்றைய நவீன பொருள்களும் சேவைகளுமாகும்.

வணிகத்துறையின் இவ்விருத்தியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையின் வளர்ச்சியும் பெருந்துணை செய்கிறது. இத்துறைகளில் ஏற்பட்ட புத்துருவாக்கச் சிந்தனைகள் வணிகச் செயற்பாடுகள் பலவாகப் பெருகவும் நிலை பெறவும் வாய்ப்பளித்துள்ளன.

எடுத்துக் காட்டாக, தகவல் மற்றும் இலக்க முறையியல் (Digital) தொழில்நுட்பமும் காரணமாக எமது செயல்களும் நுகர்வும் பெரும் மாற்றத்திற்குள்ளாகியுள்ளன. வங்கி, போக்குவரத்து, தொடர்பாடல், காப்புறுதி, களஞ்சியப்படுத்தல் போன்ற துணைச் சேவைகள் இவ்வாறான விரைவான வளர்ச்சியுடன் வினைத்திறன் மிக்க சேவைகளை வழங்குவதன் ஊடாக, வணிகம் உலகலாவிய மட்டத்திற்கு விரிவடைந்தது. இணையத்தினூடாக உலக வணிகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயன்முறை இலத்திரனியல் வணிகமாகியுள்ளது. அதாவது ஓரிடம் கருதிய சாதாரண வணிகம் (Market Place) சந்தை வணிகம், இன்று சந்தை வெளி வணிகம் (Market Space) ஆக மாற்றமடைந்துள்ளது. இம்மாற்றம் நிகழ்த்தப்பட்டது இத்துறை சார் புத்துருவாக்கச் சிந்தனைகளினூடாகவேயாகும்.

இவற்றுடன் வணிக நோக்கிய சூழல் சார் பொறுப்பு தொடர்பான புத்துருவாக்கச் சிந்தனை வெளிப்பாடாக புவியைப் பாதுகாக்கும் வழிவகைகளின் உருவாக்கமும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியவையாகும். (அவை புவிமாநாடும் அதன் செயன்முறைகளும், 3R (செயற்பாடுகள்) மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கூடாக வணிகத்தின் வெற்றியும் நிலைத்திருப்பும் புத்துருவாக்கச் செயற்பாடுகள் ஊடாகவே சாத்தியமாகின்றது என்பது எமக்கு வெளிப்படையாகிறது.

போட்டி நிறைந்த வணிக உலகில் வெற்றி கொள்ள புத்துருவாக்கம் மிக அவசியமாகிறது.

எனவே ''புத்துருவாக்கத்திறன்'' என்பது மனித வாழவின் வெற்றிக்கும் வழிவகுக்கும் விடயம் என்பதை நாமும் மனதிற் கொண்டு வாழ்வில் வெற்றிவெறுவோம்.



நியாயத்தின் பொருட்டு வெளிப்படையாக ஒருவனிடம் விவாதிப்பது சிறப்பாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுத்தலளவையும் முகத்தலளவையும் மாற்றுக் காரணிகள்

S.Sivasenthuran
( M.A.Econo, B.COM, H.N.Dip, in,ACC)
Economic Teacher

## பிரித்தானிய முறையிலிருந்து மெற்றிக் அலகு கட்டு

| | | |
|---|---|---|
| 1 ஏக்கர் | - | 0.405 எக்டேயர்கள் |
| 2 இறாத்தல் | - | 0.454 கிலோ கிராம் |
| 1 லோங் தொன் | - | 1.016 மெற்றிக் தொன் |
| 1 அந்தர் | - | 50.802 கிலோ கிராம் |
| 1 மைல் | - | 1.609 கிலோ மீற்றர் |
| 1 லோங் தொன் மைல் | - | 1635 மெற்றிக் தொன் மீற்றர் |
| 1 இறா/ஏக்கரிற்கு | - | 1.121 கிலோ கிராம் |
| 1 அந்தர்/ஏக்கரிற்கு | - | 125.536 கிலோ கிராம் |
| 1 பைந்து | - | 0.75 லீற்றர்கள் |

## மெற்றிக் முறையிலிருந்து பிரித்தானிய அலகு காட்டு

| | | |
|---|---|---|
| 1 எக்டேயர் | - | 2471 ஏக்கர்கள் |
| 1 கிலோ கிராம் | - | 2.205 இறாத்தல் |
| 1மெற்றிக் தொன் (1000 kg) | - | 0.984 லோங் தொன் |
| 1 மீற்றர் | - | 3.281 அடி |
| 1 கிலோ மீற்றர் | - | 0.621 மைல் |
| 1 புசல் நெல் (46 இறாத்தல்) | - | 20.87 கிலோ கிராம் |
| 1 மெற்றிக் தொன் நெல் | - | 47.92 புசல்நெல், 0.7 மெற்றிக் தொன் அரிசி |
| 1 மெற்றிக் தொன் அரிசி | - | 68.46 புசல் நெல் |

மூலம் - மத்திய வங்கி அறிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணயம்
1949ம் ஆண்டு 58ம் இலக்க நாணய விதிச்சட்டத்தின் 48ல் இருந்து 59 வரையான பிரிவுகளின் படி இலங்கையின் கொடுப்பனவுக்கான ஊடகமாக நாணயத்தை வெளியிடுவதற்கான அதிகாரத்தினை நாணயச் சபையிடம் ஒப்படைத்தது.அதன்படிதான் குற்றி நாணயத்தை வெளியிடுகிறது.

2012 ம் ஆண்டு நாணய வழங்கல்

| விடயம் | புதியவை | பயன்படுத்த கூடியவை | மொத்தம் |
|---|---|---|---|
| தாள் | 74.8 பில்லியன் | 280.6 பில்லியன் | 355.4 பில்லியன் |
| குற்றி | 747.3 மில்லியன் | 1.4 மில்லியன் | 748.7 மில்லியன் |

இலங்கையின் பௌதீக தோற்றமும் கால நிலையும்
அமைவிடம்
வட அகலக் கோடு $5^0$ 55' இற்கும் $9^0$ 50' இற்கும் இடையில் கிழக்கு நெடுக்கோடு $79^0$31' இற்கும் $81^0$ 53'இற்கும் இடையில் 433 km (269 மைல்) மேற்கு கிழக்காக ஆகக்கூடிய உயரம் 2.525 மீற்றர்.

பரப்பு
மொத்த பரப்பு - 65,610 சதுர கிலோ மீற்றர்
நிலப்பரப்பு - 62,705 சதுர கிலோ மிற்றர்
உள்நாட்டு நீர் பரப்பு - 2905 சதுர கிலோ மீற்றர்

குடித்தொகையும் புள்ளி விபரங்களும்
2012 நடுவாண்டு குடித்தொகை
(000) 20328

வயது பரம்பல் (2013)
0 - 14 ஆண்டு = 5171
15 - 64 ஆண்டு = 13707
65 மேல் = 1605



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடித்தொகை அடர்த்தி = சதுர கிலோ மீற்றர்
324 ஆட்கள்

| | | |
|---|---|---|
| பிறப்பு வீதம் | - | 1000 ற்கு 17.4 |
| இறப்பு வீதம் | - | 1000ற்கு 5.9 |
| இயற்கை அதிகரிப்பு | - | 1000ற்கு 11.5 |

சிசு மரண வீதம் உயிருடன்

| | | |
|---|---|---|
| பிறப்பிற்கு 1000ற்கு | = | 9.4 |
| தங்கி வாழ்வோர் வீதம் | = | 49.4% |
| மனித அபிவிருத்தி சுட்டெண் | = | (2012) 0.715 |
| 186 நாடுகளிடையே நிலை | = | 92 |

## மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அடங்கும் விடயங்கள்

01. வேளாண்மை

வேளாண்மை கால்நடை வளர்ப்பு மற்றும் காடாக்கம்.

1. தேயிலை
2. இறப்பர்
3. தெங்கு
4. சிறு ஏற்றுமதி பயிர்
5. கால்நடை வளர்ப்பு
6. நெல்
7. ஏனைய உணவுப்பயிர்
8. பெருந்தோட்டம்
9. விறகு மற்றும் காடாக்கல்
10. ஏனைய வேளாண்மைப்பயிர்.

02. மீன்பிடி

கைத்தொழில்

03. சுரங்கம் அகழ்தலும் கல்லுடைத்தலும்

04. தயாரிப்பு தொழில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. மின்வலு, வாயு மற்றும் நீர்
 1. மின்வலு
 2. வாயு
 3. நீர்

06. கட்டடவாக்கம்
 பணிகள்

07. மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்.
 1. இறக்குமதி வர்த்தகம்
 2. ஏற்றுமதி வர்த்தகம்
 3. உள்நாட்டு வர்த்தகம்

08. உணவுகளும் விடுதிகளும்
09. போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்
10. வங்கித்தொழில் கா/தி உண்மைச் சொத்து மற்றும் ஏனையவை
11. வதிவிட சொத்துரிமை
12. அரச பணி
13. தனியார் பணிகள்



உண்மை தனியாகச் செல்லும் பொய்க்குத்தான்
துணை வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (க.பொ.த) உயர் தர மாணவர்களுக்கான புதிய தொழினுட்ப துறை

திருமதி.சி.ஜெயரூபன்
ஆசிரியர்

இலங்கையின் கல்வி துறையின் விசேட 4வது திருப்ப முனையாது உயர்தர மாணவர்களுக்கான தொழிநுட்பத் துறை பாட விதானம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. (Technology Steam) 2013 ஆண்டு க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்பாட விதான அறிமுகத்திற்கான தேவை உலகிற்கு ஏற்ற தொழிநுட்ப ரீதியிலான ஆளணி வளத்தினை உருவாக்கிக் கொள்வதாகும்.

கோட்பாட்டு அறிவினை விட 'செய்தல்' ஆற்றல் உள்ள இலங்கை மாணவர்களுக்கு ஏற்றதாக கல்வித்துறையில் தற்போது க.பொ.த உயர்தரம் பிரிவுக்கு தொழில்நுட்பத் துறையை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

நோக்கம் :-

1. நாளாந்த வாழ்விற்குப் பயன்படத்தக்க வகையில் மாணவர்களை தொழிநுட்பத் திறன்கள் கொண்டோராக ஆயத்தம் செய்தல்.
2. பிரச்சனைகளுக்குத் தொழிநுட்ப ரீதியான தீர்வுகளை விருத்தி செய்வதற்கான திறன்களை மேம்படுத்தல்.
3. மேலதிக தொழிற்தகமையை வழங்குதல்
4. தேசிய தொழில் தகமை (NVQ) சட்டகத்தின் அடிப்படையில் மாணவர்களை அவர்களின் தொழில்சார் கல்வியைத் தொடர இயலுமானவர்களாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தரப் பிரிவினருக்கான துறைகள் (பாடவிதானங்கள்)

1. கணிதம் 2. விஞ்ஞானம்
3. கலை 4. வர்த்தகம்
5. தொழிநுட்பதுறை (2013 ஆண்டு தொடக்கம்)

**தொழிநுட்பக் கற்கை துறையில் அடங்கும் பாடங்கள்**

1. பொறியியற் தொழிநுட்பவியல் / உயிரியல் முறைமைகள் தொழிநுட்பவியல் (ஏதாவதொன்று)
2. தொழிநுட்பவியலிற்கான விஞ்ஞானம்
3. விதந்துரைக்கப்பட்ட பத்துப்பாடங்கள்

1. பொறியியல் தொழிநுட்பவியல்
   1. மெகானிக்கல் தொழில்நுட்பம்
   2. மின்னியல் தொழில்நுட்பம்
   3. சிவில் தொழில்நுட்பம்

   அல்லது

   உயிரியல் முறைமைகள் தொழிநுட்பவியல்
   - ❋ உணவுத் தொழில்நுட்பவியல்
   - ❋ விவசாய தொழில்நுட்பவியல்
   - ❋ உயிர்வள தொழில்நுட்பவியல்

2. தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்.
   - ❋ இரசாயனம்
   - ❋ பௌதீகம்
   - ❋ உயிரியல்
   - ❋ கணிதம்

3. பின்வரும் பாடங்களில் ஒன்று (10)
   - ❋ பொருளியல்
   - ❋ புவியியல்
   - ❋ மனைப்பொருளியல்
   - ❋ ஆங்கிலம்
   - ❋ கணக்கீடு
   - ❋ வணிகக்கல்வி
   - ❋ தொடர்பாடலும், ஊடகக் கற்கையும்
   - ❋ தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
   - ❋ சித்திரம்
   - ❋ விவசாய விஞ்ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில்நுட்பத்துறை பாட விதானத்தை தெரிவு செய்வதற்கான தகமை

**குறைந்தளவு தகைமை**

1. கணிதம், விஞ்ஞானம் உள்ளிட்ட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்
2. யாதும் மூன்று பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

**பாடத்துறை(அ)**

1. பொறியியல் தொழில்நுட்பம் குடிசார், இயந்திரம் மற்றும் மின்னியல் தொழில்நுட்பங்களின் கோட்பாடுகளும் பயிற்சிகளும்
2. தொழில்நுட்பத்துக்கான விஞ்ஞானம் இரசாயனம், பௌதீகம், உயிரியல் மற்றும் கணிதம் போன்ற தொழில் நுட்பங்களுக்குத் தேவையான கோட்பாடுகளும் பயிற்சிகளும்
3. விதந்துரைக்கப்பட்ட பத்துப் பாடங்களில் தெரிந்தெடுத்துக்கொள்ள வேண்டிய ஒரு பாடம்

**பாடத்துறை(ஆ)**

1. உயிர்த்தொகுதி தொழில்நுட்பம் உணவு, அறுவடைக்குப் பின், விவசாயம், உயிர் வள தொழில் நுட்பங்களின் கோட்பாடுகளும் பயிற்சிகளும்
2. தொழில்நுட்பத்துக்கான விஞ்ஞானம் இரசாயனம், பௌதீகம், உயிரியல் மற்றும் கணிதம் போன்ற தொழில் நுட்பங்களுக்குத் தேவையான கோட்பாடுகளும் பயிற்சிகளும்
3. விதந்துரைக்கப்பட்ட பத்துப் பாடங்களில் தெரிந்தெடுத்துக்கொள்ள

மதிப்பீடு :- எழுத்துப்பரீட்சை – 75 புள்ளிகள்
செய்முறைப் பரீட்சை – 25 புள்ளிகள்

### தொழில்நுட்பத்துறையுடன் தொடர்புடைய வழங்கப்படவுள்ள பட்டங்கள்

01. கணினி விஞ்ஞானப்பட்டம்
02. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
03. பிரயோக விஞ்ஞான பௌதீக விஞ்ஞானப்பட்டம்
04. விவசாய தொழிநுட்பப் பட்டம்
05. சூழல் பாதுகாப்பு முகாமைத்துவப் பட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. விலங்கு விஞ்ஞானமும் மீன்பிடி பட்டம்
07. உணவு தயாரிப்பில் தொழில்நுட்ப முகாமைப்பட்டம்
08. பிரயோக விஞ்ஞானப் பட்டம்.
09. கணிய அளவையியல் பட்டம்
10. அளவையியல் விஞ்ஞானப் பட்டம்
11. நீரியல் வளத் தொழிநுட்பப் பட்டம்
12. கட்டடக்கலை / கட்டட வடிவமைப்பு பட்டம்

**தொழில்நுட்பத்துறையுடன் தொடர்புடைய மேற் படிப்பு**

01. தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா - மொரட்டுவ பல்கலைக்கழகம்

0.2 பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா - உயர் தொழில் நுட்பகல்வி நிறுவகம்

03. பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா பொறியியல் தொழில் நுட்ப நிறுவகம் கட்டுநாயக்கா

04. தொழில் நுட்பத்தில் டிப்ளோமா – திறந்த பல்கலைக்கழகம்

05. தொழில் நுட்பத்தில் விசேட கற்பித்தல டிப்ளோமா – கல்விக் கல்லூரி

06. தொழில் நுட்பப் பாடத்தில் NVQ – 4 சான்றிதழ் - தொழில் நுட்பவியல் கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரி

07. NVQ – 4 சான்றிதழ் - 14 தொழில் பயிற்சி நிலையம்

08. முயற்சியாண்மை கற்கை – முயற்சியாண்மை பயிற்சி நிலையம், கட்டுநாயக்கா

09. தொழில் நுட்ப கற்கைகள் - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிலையம்


10. அரச அங்கீகாரம் பெற்ற தனியார் நிறுவனங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொழில் நுட்பத்துறையுடனான எதிர்கால சந்தர்ப்பங்கள்.**

**Future Opportunities..........**




இப்பாட விதான அறிமுகம் ஆனது விஞ்ஞான கணித கலை, வர்த்தகப்பிரிவில் பல்கலைக்கழக அனுமதிபெறும் மாணவர்களில் வீத மாற்றங்களை எதிர்பார்ப்பதும் வேலை உலகிற்கு ஏற்ப வேலைப் படையை வழங்குவது ஆகும்.

நல்லவர்களோடு நட்பாயிரு நீயும் நல்லவனாய் இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக அனுமதி முறையில் Z score ஒரு நடைமுறை நோக்கு

திருமதி. ஆஞ்சலா மென்சிரூபகுமார்
ஆசிரியர்

Z score கணித்தல்

$$Z \text{ புள்ளி } = \frac{x - \bar{x}}{\sigma}$$

என்பதாக தரப்படும். இங்கு $\bar{X}$, a பற்றி அறிந்து கொள்வோமெனின்

| மாணவர்கள் | கணிதம் | | தமிழ் | |
|---|---|---|---|---|
| | பெற்ற புள்ளி | Z புள்ளி | பெற்ற புள்ளி | Z புள்ளி |
| A | 42 | $\frac{42-46}{2.6} = 53\%$ | 22 | $\frac{22-52}{22.7} = 1.3\%$ |
| B | 44 | $\frac{44-46}{2.6} = 0.77\%$ | 32 | $\frac{32-52}{22.7} = 0.88\%$ |
| C | 47 | $\frac{47-46}{2.6} = 0.38\%$ | 54 | $\frac{54-52}{22.7} = 0.09\%$ |
| D | 48 | $\frac{48-46}{2.6} = 0.77\%$ | 68 | $\frac{68-52}{22.7} = 0.70\%$ |
| E | 49 | $\frac{49-46}{2.6} = 1.15\%$ | 84 | $\frac{84-52}{22.7} = 1.41\%$ |
| $\bar{X}$ | 46 | - | 52 | - |
| $\sigma$ | 2.6 | - | 22.7 | - |

Z Score ஐ அதிகரித்தல்

Z புள்ளி $\frac{x - \bar{x}}{\sigma \rightarrow}$ மாறிலி

சாதாரண கணித முறைப்படி Z புள்ளி அங்கிகரிப்பதற்கு X-$\bar{X}$ ஆகவும்

$\sigma$ குறைவாகவும் இருத்தல் வேண்டும். இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக மாணவர்கள் திறமை மட்டத்தை அறிவதற்கு அல்லது தெரிவை மேற் கொள்ளுவதற்கு Z புள்ளி அளவுத்திட்ட முறை மிகவும் சிறந்த முறையாகும். ஒரு மாணவன் தனது Z புள்ளியை அதிகரிப்பதற்கு கடினமான பாடங்களை அல்லது மற்றவர் குறைவாக புள்ளிகளைப் பெறும் பாடங்களை தெரிவு செய்யவேண்டும். எல்லோருக்கும் இலகுவான பாடங்களை தெரிவு செய்யும் போது பல்கலைகழக அனுமதி இல்லாமல் போகும் நிலை ஏற்படலாம்.

தற்போதைய கா.பொ.தா. (உ/த) பரீட்சை முடிவில் ஒரு மாணவனின் மூன்று பாடங்களினதும் புள்ளி தனித்தனியாக கணிக்கப்பட்டு அதன் சராசரி அறியப்பட்டு அதுவே இறுதி Z புள்ளியாக அனுப்பி வைக்கப்படுகின்றது.

**யாரக்கும் உதவி செய்யாதவர்கள் பிறரி உதவியை எதிர்பார்க்க முடியாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பல்கலைக்கழக முறைமை

திருமதி. J. சுதர்சினி
(ஆசிரியர்)

இலங்கையில் பல்கலைகழக முறைமையானது 1978 ஆண்டில் 16 ம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழக சட்டத்தில் விதிக்கப்பட்ட வரையரைக்குள் இயங்குகின்றது.

பல்கலைகழக சட்டத்தின் கீழ் 14 தேசிய பல்கலைக் கழகங்கள், 3 வளாகங்கள், 5 நிறுவகங்கள் படப்டப்பயில் கற்கை நெறிகளுக்காக இயங்குகின்றது.

14 தேசிய பல்கலைகழகங்கள்

- கொழும்புப் பல்கலைகழகம்
- பேராதனைப் பல்கலைகழகம்
- ஸ்ரீ ஜயவர்த்தனபர பல்கலைகழகம்
- களனிப் பல்கலைகழகம்
- மொறட்டுவ பல்கலைக்கழகம்
- யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
- உறுகுணைப் பல்கலைக்கழகம்
- கிழக்குப் பல்கலைக்கழகம்
- இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம்
- இலங்கை ராஜரட்ட பல்கலைக்கழகம்
- இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகம்
- இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்
- இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
- கட்புல அரங்கேற்ற பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 வளாகங்கள்

திருகோணமலை வளாகம்
வவுனியா வளாகம்
ஸ்ரீ பாளி வளாகம்

5 நிறுவனங்கள்

சுதேச மருத்துவ நிறுவகம்
கம்பஹா விக்ரமாராசலி ஆயுள்வேத நிறுவகம்
கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கல்லூரி
சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம் (கி.ப)
இராமநாதன் நுண்கலைக்கழகம் யாழ்பாணப் பல்கலைக்கழகம்.

விஞ்ஞான, கணித, கலை வர்த்தகப்பிரிவுகளாக பல்கலைகழக அனுமதி வழங்கப்படுகின்ற போதிலும், மாணவர்கள் மத்தியில் பல்கலைகழக அனுமதி பற்றிய போதிய அறிவின்மையின் காரணமாக பல மாணவர்கள் பல்கலைகழக அனுமதிக்கு தகுந்தவர்களாக இருந்த போதிலும் பல்கலைகழக வாழ்வை பலர் இழக்கின்றனர்.

கலைப்பிரிவில் பயிலும் மாணவர்கள் Z புள்ளியின் அடிப்டையில்

| | |
|---|---|
| கலை<br>தொடர்பாடற் கற்கைகள்<br>இஸ்லாமியக் கற்கை<br>அரபு மொழிக் கற்கைகள் | கொழும்பு, யாழ், கிழக்கு, தென் கிழக்கு, களனி, சப்பிரகமுவ 6000 இற்கு மேற்பட்ட மாணவர்கள் உள்வாங்கப்படுகின்றனர். |

சங்கீதம்/சித்திரம் வடிவமைப்பு/நாடாக்கமும் அரசாங்கமும்/கட்புல கற்கைகள்
(மாத்திரமே பற்பட்டபடிப்பு என்றும் ஏனைய அறிவு குறைவாகவே உள்ளது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகவியல் பிரிவில்

| | |
|---|---|
| முகாமைத்துவம்<br>பொது முகாமைத்துவம்<br>வணிகவியல் | 4000 மேற்பட்ட மாணவர்கள் கிழக்குபல், யாழ்பல்கலை, களனி, உறுகுணை, தென் கிழக்கு, ராஜரட்ட வயம்ப சப்ரகமுவ, பேராதனை பல்கலைக்கழகம் |

ஆகியன மாத்திரமே பட்டப்பயில் கற்கைகள் என்ற எண்ணக்கரு இருந்து வருகின்றது. நமது நாட்டில் எத்துறையில் சென்றாலும் அத்துறையில் மாத்திரமே பட்டப்படிப்பு என்ற கோட்பாட்டை உடைத்து எறிந்து குறிப்பிட்ட Z புள்ளிக்கு மேல் அனைவருக்கும் பல்கலைகழக படிப்பிற்கு தகுதியானவர்களே உயர்கல்வி அமைச்சு கோட்பாட்டை கொண்டுவந்து கல்வியை உயர்த்துகின்றது.

இதனை விட கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானப் பிரிவில் 3 பாடமும் சித்தியெய்தி தமக்க தேவையான துறையை அவர்களே தேர்ந்தெடுக்க கூடியதாக உள்ளது.

- தகவல் தொடர்பாட்ல தொழில்நுட்பம் (ICT)150 மாணவர்களை ராஜரட்டை மற்று வவுனியாவளாகமும்
- கட்டடக்கலை வடிவமைப்பு / நவநாகரீக வடிவமைப்பு- மொறட்டுவை பல்கலைகழகம ( 50 ) மாணவர்களையும்

நவநாகரீக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் (Fashion Design &product) 40 மாணவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகமும்

Land Architecture – நிலத் தோற்ற கட்டடசேவை -50 மாணவர்களை சட்டம் (Law) 350 மாணவர்களை கொழும்பு பல்கலைக்கழகமும்

கணக்கிடலும்,முகாமைத்துவமும் computation management பேராதனை பல்கலைக்கழகம் 50 மாணவர்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Management & information technology-முகாமைத்துவமும் தகவல் தொழில் - தென் கிழங்கு பல்கலைகழக 90 மாணவர்களையும்

தொழில் முயற்சியும் முகாமைத்துவமும் (Entrepreneurship management) 65 மாணவர்களையும்

கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் (industrial Iny Technology) ஊவா வெல்லச பல்கலைகழக 60 மாணவர்கள்

விருந்தோம்பல் சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்தவம். Hospitality ,tourism & events Management உவா வெல்லச பல்கழகம் 65 மாணவர்களையும்.

உடற்தொழில் கல்வி / விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும்

பேச்சு செவிமடுத்தல் விஞ்ஞானமும் சப்பிரகமுவ பல்கலைகழகம் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர Speech & hearing science (50 மாணவர்கள்)

களனிப் பல்கலைகழக மருத்துவபீடத்தில் கல்வி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்தவம் சப்பிரகமுவ, இராஜட்ட பல்கலைகழகமும் சேர்ந்து 120 மாணவர்களையும் உள்வாங்குகின்றது.

இவ்வாறு கற்கை நெறிகளுக்கு தெரிவதற்கு ஏதேனும் 3 பாடங்களில் சித்தியெய்தினாலே போதுமானது.எத்துறையினரும் இப்பாடங்களுக்கு விண்ணப்பிக்க முடியம்.

மாணவர் சமுதாயம் தனியே தமது உயர்தரப்பாடங்களுடன் நின்ற விடாது இவ்வாறான பல்வேறுபட்ட கற்கைகளுக்கும் விண்ணப்பித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைகழகத்தால் உள்வாங்கப்பட வேண்டும் என்பதே நமது குறிக்கோள்.

வளாகம் என்பது தேசிய பல்கலைகழகங்களில் இல்லாத ஒருபீடத்தையோ அல்லது 2 பீடங்களை வேறு மாவட்டத்திலோ அல்லது அம் மாகாணத்திலோ அமைத்து கற்கைகளை மேற்கொள்ளல்

உதாரணமாக யாழ்பாண பல்கலைகழகத்தில் வளாகம் வவுனியாவில் இயங்குகின்றது. இவ்வளாகத்தில் பிரயோக விஞ்ஞானப்படமும் , முகாமைத்தவ கற்கைகளும் Faculty applied Science, Faculty of Busines Studies இயங்குகின்றது.



முறையான மனிதர்கள் இருவர் ஒருவர் இன்னும் பிறக்கவில்லை. மற்றவர் இறந்து விட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பித்தல் பணியை கற்பவர்கள் மையமாக மாற்றுவதில் தகவல் தொடர்பு நுட்பத்தின் பங்கு

திருமதி. ப.சுதாகரன்
ஆசிரியர்

21ம் நூற்றாண்டில் கல்வித்துறை மாற்றத்தில், தகவல் தொடர்பு திட்டம் பேருதவி புரிந்துள்ளதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இத்திட்டம் முறையாக செயல்படுத்தபடுமேயானால், வாழ்நாள் முழுக்க பயன்படும் கல்வி அறிவு மற்றும் திறமையை மாணவர்கள் எளிதாக பெற இயலும்.

தகவல் தொடர்பு நுட்பம், குறிப்பாக, கணிணி மற்றும் இணையதளம் முறையாகப் பயன்படுத்தப்பட்டால், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இருவரும் பயன்பெறும் வாய்ப்பு உள்ளது. இந்தப் புதிய முறை பாடம் கற்பித்தலில், ஆசிரியர்கள் மாணவர்களை மையப்படுத்தி கற்பிக்க வழிவகுக்கிறது.

**ஆர்வத்துடன் பயிலுதல்:**

தகவல் தொடர்பு தொழில் நுட்ப பயன்பாட்டின் மூலம், பல புதிய முறைகளில் தகவலை பயன்படுத்த மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. மனப்பாடம் செய்து படிப்பதைக் காட்டிலும், வாழ்க்கையில் சந்திக்கும் பிரச்சனைகளை எதிர்கொள்ளுதல், கற்றலை எளிமையாக்குதல், கற்போரின் வாழ்க்கை சூழ்நிலைக்கு ஏற்ப கல்வி அமைதல் ஆகியவை சாத்தியமாகும்.

**கூட்டாக பயிலுதல் :**

தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தை பயன்படுத்தி பயிலுதல் முறையானது, மாணவர்கள், ஆசிரியர்கள், வல்லுநர்களிடையே அவர்களுடைய இடம், தகுதியை கணிக்காமல் கலந்துரையாட ஊக்குவிக்கின்றது. பலவிதமான கலாச்சார பிரிவினரிடையே பழகுவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கிறது. இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் கற்போருடையே ஒருமித்த கருத்தும், தகவல் பரிமாறிக் கொள்ளும் திறனும் அதிகமாக உதவி செய்கிறோம். மேலும் கல்வி பயிலுதல் ஒரு காலகட்டத்திற்கு மட்டும் என்றில்லாமல், வாழும் காலம் முழுக்க தொடர்பணியாக மேற்கொள்ளப்படுகிறது.

**தகவல் தொடர்பு தொழில் நுட்பம் பயிலுதலை உண்மையிலேயே அதிகப்படுத்தி உள்ளதா?**

தகவல் தொடர்பு நுட்பத்தினால் கல்வியில் தாக்கம் ஏற்படுவது, அது எப்படி பயன்படுத்தப்படுகிறது, எதற்காக பயன்படுத்தப்படுகிறது, என்பதைப் பொறுத்து அமையும். மற்ற கல்வி கற்கும் சாதனங்கள், கருவிகள், மாதிரிகளைப் போல, தகவல் தொடர்பு நுட்பம் எல்லாருக்கும், எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி செயல்படுவதில்லை.

**கல்வி பயிலுதலை சாத்தியமாக்குதல்:**

தகவல் தொடர்பு நுட்பம், அடிப்படை கல்வி பயிலுதலை எவ்வளவு அதிகப்படுத்தியுள்ளது என்பதை கணித்தல் கடினமாகும். ஏனென்றால் இதற்காக நடத்தப்பட்ட ஆய்வுப்பணி சிறிய அளவிலானது. முழுமையாகவும் அது பற்றி கருத்து தெரிவிக்கப்படவில்லை. தொடக்கப் பள்ளி அளவில் தகவல் தொடர்பு நுட்பம் கடைபிடிக்கப்பட்ட மாதிரிகளும் இல்லை. உயர் கல்வி மற்றும் பெரியோர் கல்வியில், பல்கலைக்கழகங்களுக்கு செல்ல முடியாதவர்களுக்கு தகவல் தொடர்பு நுட்பங்கள் மூலம் கல்வி பயில வாய்ப்பு கிடைத்தது ஓரளவிற்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.

**தரம் உயர்த்துதல்:**

வானொலி, தொலைக்காட்சி மூலம் கல்வி ஒளிபரப்பின் தாக்கம் குறித்த முழுமையான ஆய்வு நடத்தப்படவில்லை என்றாலும், சிறிதளவு மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளின் படி, சாதாரண பள்ளிக்கூடகல்வி முறையோடு இம்முறை ஒத்திருப்பதாக தெரிய வருகிறது. இம்முறையால் மாணாக்கர்களின் மதிப்பெண்களும், அவர்கள் பள்ளிக்கு வருகின்ற நாட்களும் உயர்ந்திருப்பதாக தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக, கணிணிப் பயன்பாடு, இணையதள மற்றும் அது தொடர்பான நுட்பங்களின் பயன்பாட்டால், பயிலுதலில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று கருதப்படுகிறது. ஆனால், இது பற்றி கருத்து பேதங்களும் நிலவுகிறது.

கணிணியின் பயன்பாட்டால், இருக்கக்கூடிய பாடத்திட்டத்தின் பயன்பாட்டளவு உயர்ந்துள்ளதாக பல ஆய்வுகள் கூறுகின்றன. குறிப்பாக, கணிணி, ஒரு ஆசிரியராக இருந்து, எப்போதும் பயன்படுவதால், பாடங்களில் மாணவர்கள் அதிக மதிப்பெண் பெற உதவி புரிந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளன. மாணவர்களும் விரைவாக கல்வி பயிலுகின்றனர். கற்கும் திறன் அதிகமாகின்றது. மாணவர்கள் கணிணியை பயன்படுத்தும்போது, அதிகமாக படிக்கத் தூண்டுதல் ஏற்படுகின்றது. இவ்வளவு முடிவுகள் தெரிவிக்கப்பட்டாலும் இதிலும் சில குறைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

கணிணி பயன்பாடு, இணையதளம், அது சார்ந்த நுட்பங்கள், ஆசிரியர் பயிற்சியும், படிப்பதற்கு உகந்த சூழலை உருவாக்கவும், உதவி செய்கிறதாம். இந்த ஆய்வுகள் அனைத்தும், விமர்சனத்திற்கு உட்பட்டவை. இதில் குறைகள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. சரியான புள்ளி விபரங்கள் இல்லாததே குறையாகும். மாணவர்கள் ஆசிரியர்களுக்கிடையே கருத்துப் பரிமாற்றம், கல்வி கற்றலில் நல்லதொரு மாற்றத்தைக் கொண்டு வரும் என கூறுப்படுகிறது.

கணிணி மற்றும் இணைய தளங்களின் பயன்பாட்டை கணிப்பதில் உள்ள ஒரு பிரச்சனை, கற்போரை மையமாக வைக்கும் கல்வி சூழலை பரிசோதிக்க, தற்போது நடைமுறையில் இருக்கும் அளவீடுகளால் முடியாது. அத்துடன் கற்கும் முறையோடு, தொழில்நுட்ப பயன்பாடும், ஒருங்கிணைந்து வருவதால், எந்த நுட்பம் சரியானது என்பதை கண்டுபிடிப்பதும் கடினம். கற்றலில் ஏற்படும் மாற்றத்திற்கு, நுட்பங்கள்தான் காரணம் என்பதையும் முடிவு செய்ய இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014 கலைப்பிரிவு

| இல | பெயர் | முகவரி |
|---|---|---|
| 01 | ச.தயாபரன் | இல. 17/13, அலஸ்த்தோட்டம், திருகோணமலை |
| 02 | ம.உமாசங்கர் | இல. 146, 3ம் ஒழுங்கை, ஆனந்தபுரி, திருகோணமலை. |
| 03 | எஸ்.மயூரன் | இல. 179, 4ம்ஒழுங்கை, ஆனந்தபுரி, திருகோணமலை. |
| 04 | ஜே.சுலோமினா | இல. 56/1, நித்தியபுரி, திருகோணமலை. |
| 05 | அ.பிரன்சினா | இல. 25/13, பள்ளத்தோட்டம் , திருகோணமலை |
| 06 | க.அகல்யா | வரோதயநகர், திருகோணமலை |
| 07 | தி.சுபி | இல. 40/5, உதயபுரி, செல்வநாயகபுரம், திருகோணமலை |
| 08 | கு.ஈஸ்வரி | இல. 30, முருகன்கோவில் வீதி, பள்ளத்தோட்டம், திருகோணமலை. |
| 09 | ர.தினுசியா | இல. 63, அலஸ்த்தோட்டம், திருகோணமலை |
| 10 | நா.ஜனனி | இல. 05, ஆனந்தபுரி, திருகோணமலை. |
| 11 | ந.திலூஜனா | இல.146, 3ம் ஒழுங்கை, ஆனந்தபுரி |
| 12 | த.சுகிர்தா | இல. 884,செல்வநாயகபுரம், திருகோணமலை |
| 13 | த.தட்சாயினி | இல.930/1, பாடசாலை வீதி, செல்வநாயகபுரம், திருகோணமலை |
| 14 | க.ரேவதி | செல்வநாயகபுரம், திருகோணமலை |
| 15 | சு.தமிழ்ச்செல்வி | இல. 273/A நித்தியபுரி, திருகோணமலை. |

**ஆயிரம் முறை சிந்தியுங்கள் ஒரு முறை முடிவெடுங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015 கலைப்பிரிவு

| இல | பெயர் | முகவரி |
|---|---|---|
| 01 | ம.லயசாந் | இல.40/42, செல்வநாயகபுரம், திருகோணமலை |
| 02 | த.மேகன்ராஜ் | இல.73, 2ம்ஒழுங்கை, ஆனந்தபுரி, திருகோணமலை |
| 03 | சா.டனுஜன் | இல.299, சோலையடி, திருகோணமலை |
| 04 | கி.சதுர்திகா | இல.798, 5ம்ஒழுங்கை, செல்வநாயகபுரம், திருகோணமலை |
| 05 | மோ.தவப்பிரியா | இல.840, செல்வநாயகபுரம், திருகோணமலை. |
| 06 | இ.தனுசா | இல.34, உதயபுரி, செல்வநாயகபுரம், திருகோணமலை. |
| 07 | இ.வனஜா | இல.40, நித்தியபுரி, திருகோணமலை |
| 08 | கு.கீர்த்தனா | இல.77, அலஸ்த்தோட்டம், திருகோணமலை |
| 09 | த.மதுஷா | இல.766, செல்வநாயகபுரம், திருகோணமலை |
| 10 | சி.சர்மிளா | இல.250/2, அலஸ்த்தோட்டம், திருகோணமலை. |
| 11 | ர.டெல்சியா | இல.36/26, செல்வநாயகபுரம், திருகோணமலை. |
| 12 | சு.பிரசாந்தினி | இல.304, புதுக்குடியிருப்பு, திருகோணமலை |
| 13 | தே.ஜானுஜா | இல.246/6, அலஸ்த்தோட்டம், திருகோணமலை |
| 14 | த.கீர்த்தனா | இல.144, ஆனந்தபுரி, திருகோணமலை. |
| 15 | சு.தர்ஷிகா | இல.06, செல்வநாயகபுரம், திருகோணமலை |
| 16 | க.நிதர்சினி | இல.801/3, செல்வநாயகபுரம், திருகோணமலை |
| 17 | யோ.நீதா | திருச்சிலுவை கன்னியர் மடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 கலைப்பிரிவு

| இல | பெயர் | முகவரி |
|---|---|---|
| 01 | அ.அபிசன் | இல.359, சோலையடி, திருகோணமலை. |
| 02 | ஞா.கிரிசாந் | இல.12, புளியங்குளம், திருகோணமலை. |
| 03 | கி.மதுஷன் | இல.29/2, செல்வநாயகபுரம், திருகோணமலை. |
| 04 | க.மகேசன் | இல.747, செல்வநாயகபுரம், திருகோணமலை |
| 05 | ஆ.றொசாந்தன் | இல.248, ஆனந்தபுரி, திருகோணமலை |
| 06 | மோ.சாரோன் | இல.58, வரோதயநகர்,திருகோணமலை. |
| 07 | ச.அனுஜா | இல.382, சோலையடி ,திருகோணமலை. |
| 08 | கு. ஹம்சவாகினி | இல.132, 2ம்ஒழுங்கை, நித்தியபுரி, திருகோணமலை |
| 09 | ச.யசோ | இல.18/38, 2ம்ஒழுங்கை, ஆனந்தபுரி, திருகோணமலை |
| 10 | ர.ஜனனி | இல.49, புளியங்குளம், திருகோணமலை |
| 11 | ச.கிருஸ்ணவேணி | இல.36, உதயபுரி, செல்வநாயகபுரம், திருகோணமலை. |
| 12 | க.கம்சனா | இல.55, தேவாநகர், திருகோணமலை |
| 13 | இ.கௌசிகா | இல.14, அலஸ்த்தோட்டம், திருகோணமலை |
| 14 | நா.நாகலெட்சுமி | இல.18, உதயபுரி, செல்வநாயகபுரம், திருகோணமலை |
| 15 | அ.ரஜிதா | இல.189, 4ம்ஒழுங்கை, ஆனந்தபுரி, திருகோணமலை |
| 16 | சி.சர்மிளா | இல.19, 1ம்ஒழுங்கை, ஆனந்தபுரி, திருகோணமலை |
| 17 | சு.சுஜிதா | இல.29, பள்ளத்தோட்டம், திருகோணமலை |
| 18 | கு.சுசாந்தினி | இல.568, செல்வநாயகபுரம், திருகோணமலை |
| 19 | மா.தர்சிகா | இல.670, செல்வநாயகபுரம், திருகோணமலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | பெயர் | முகவரி |
|---|---|---|
| 20 | மு.தவரோஜினி | இல.363, சோலையடி, திருகோணமலை |
| 21 | அ.துசந்தினி | இல.15/5, 2ம்ஒழுங்கை, ஆனந்தபுரி, திருகோணமலை |
| 22 | ந.யோகினி | இல.146, 3ம்ஒழுங்கை, ஆனந்தபுரி, திருகோணமலை |
| 23 | தி.பிரியா | இல.3, தேவாநகர், திருகோணமலை |
| 24 | ஜீ.வானதி | இல.22/72, அலஸ்த்தோட்டம், திருகோணமலை |
| 25 | ம.கோகிலவாணி | இல.39/6, 2ம்ஆனந்தபுரி, திருகோணமலை. |
| 26 | த.கஜேந்தினி | இல.12, அலஸ்த்தோட்டம், திருகோணமலை |
| 27 | யோ.ஜெசிந்தா | இல.848, செல்வநாயகபுரம், திருகோணமலை |
| 28 | ஆ.நிக்ஷிஷா | இல.229, 3ம்ஒழுங்கை, ஆனந்தபுரி, திருகோணமலை |
| 29 | ரா.டிலாணி | இல.55, செல்வநாயகபுரம், திருகோணமலை |
| 30 | ஸ்ரீ.சிந்துஜா | இல.90, தேவாநகர், திருகோணமலை |
| 31 | வி.தாட்சாயினி | இல.800, செல்வநாயகபுரம், திருகோணமலை. |
| 32 | ம.லக்ஷிகா | இல.7/10, அலஸ்த்தோட்டம், திருகோணமலை |
| 33 | ச.தாரணியா | இல.153 ஆனந்தபுரி, திருகோணமலை |
| 34 | மு.கலோஜினி | இல.87, அலஸ்த்தோட்டம், திருகோணமலை |
| 35 | ந.கௌசிகா | இல549, அலஸ்த்தோட்டம், திருகோணமலை |
| 36 | பி.கவாஸ்கர் | இல.116, புளியங்குளம், திருகோணமலை |
| 37 | ந.சுவாதி | இல36 பள்ளத்தோட்டம்,திருகோணமலை |
| 38 | ச.ஜீவராஜ் | இல158/8, 3ம்ஒழுங்கை,திருகோணமலை |
| 39 | ஞா. துஹிரா | திருச்சிலுவை கன்னியர்மடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2014 வர்த்தகப்பிரிவு

| இல | பெயர் | முகவரி |
|---|---|---|
| 01 | S.சயன் | இல.11, புளியங்குளம், திருகோணமலை. |
| 02 | B.கலிஸ்ரஸ் | இல.243, ஆனந்தபுரி, திருகோணமலை. |
| 03 | G.எரோசன் | இல.246/8, அலஸ்த்தோட்டம், திருகோணமலை |
| 04 | R.ராஜ்கரன் | இல.871, செல்வநாயகபுரம், திருகோணமலை |
| 05 | B.அருள்காந் | இல.59, கோணேசபுரி, திருகோணமலை. |
| 06 | U.பிரசாந் | இல.617, அன்புவழிபுரம், திருகோணமலை. |
| 07 | J.டர்சிகா | இல.246/4, அலஸ்த்தோட்டம், திருகோணமலை. |
| 08 | T.சிந்துஜா | இல.366, சோலையடி, திருகோணமலை. |
| 09 | M.நிலோஜனி | இல.867, செல்வநாயகபுரம், திருகோணமலை |

## 2015 வர்த்தகப்பிரிவு

| இல | பெயர் | முகவரி |
|---|---|---|
| 01 | செ.தினேஸ்குமார் | இல.585, செல்வநாயகபுரம், திருகோணமலை. |
| 02 | பௌ.ஆனந்தராசா | இல.88, புளியங்குளம், திருகோணமலை. |
| 03 | உ.கருணாகரன் | இல.901, வள்ளுவர்வீதி, செல்வநாயகபுரம், திருகோணமலை. |
| 04 | ட.திவாகர் | இல.27, கல்லரி ஒழுங்கை, திருகோணமலை |
| 05 | ச.கிஷா | இல.111, 2ம்ஒழுங்கை, ஆனந்தபுரி, திருகோணமலை |
| 06 | சி.வாசுகி | இல.36/23, வள்ளுவர்வீதி, செல்வநாயகபுரம், திருகோணமலை |
| 07 | ஜெ.டிகிலா | இல.523, நிலாவெளிவீதி, திருகோணமலை |
| 08 | க.வைணவி | இல.746, பாடசாலைவீதி, செல்வநாயகபுரம், திருகோணமலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 வர்த்தகப்பிரிவு

| இல | பெயர் | முகவரி |
|---|---|---|
| 01 | ந.நதுஷன் | இல.28/1, பள்ளத்தோட்டம், திருகோணமலை |
| 02 | க.துஸ்யந்தன் | இல.769, பாடசாலைவீதி, செல்வநாயகபுரம், திருகோணமலை |
| 03 | ப.ரேணுகா | இல.12, 1ம்ஒழுங்கை, ஆனந்தபுரி, திருகோணமலை |
| 04 | ர.கஜேந்தினி | இல.29, அலஸ்த்தோட்டம், திருகோணமலை. |
| 05 | சி.ஸஜந்தினி | இல.900, பாடசாலைவீதி, செல்வநாயகபுரம், திருகோணமலை |



பகுத்தறிவு இயல்பான அறிவு,

அது அதிகம் இருந்தால் பேரறிஞன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி பகிர்கின்றோம்

"காலத்தினால் செய்த உதவி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

எமது பாடசாலையின் உயர்தர மாணவர்களின் பிரியாவிடையை முன்னிட்டு துமி-4 சஞ்சிகை வெளியிடப்படுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். இப் பொன்னான தருணத்தில் நன்றி கூறுவதில் நாம் பெருமிதம் கொள்கின்றோம்.

இச் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்கிய திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.ந.விஜேந்திரன் அவர்களிட்கும், அதிபர், பிரதி அதிபர்கள் அவர்களிட்கும் மற்றும் எமக்கு அனைத்து விதமான உதவியை வழங்கிய பாடசாலை அபிவிருத்தி குழுவினருக்கும், பழைய மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மற்றும் நிதி உதவிகளை வழங்கிய நிறுவனங்கள், பெற்றோர்கள், பெரியோர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் இவ்வாக்கம் நூல் வடிவம் பெற கணினி உதவி வழங்கிய பழைய மாணவி செல்வி தே.ஷர்மிளா அவர்களுக்கும் சகல விதத்திலும் உதவிகள் புரிந்த கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் நூல் வடிவமைப்பை வழங்கிய SS Digital's நிறுவனத்தின ருக்கும், மேலும் துமி -4 வெளிவர சகல வழிகளிலும் முன்னின்று உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் எம் உள்ளம் கனிந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம்.

நன்றி

உயர்தர மாணவர் ஒன்றியம்
(2013/2014)
தி/செல்வநாயகபுரம்இ.ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org